ஆங்கில புதுவருட சிறப்பிதழ்
வியாழக்கிழமை 29 டிசம்பர் 2022
தமிழழருவி வார இதழ் | Tamilaruvi Weekly

# தமிழருவி




அருவி: 02 | சாரல்: 49

தமிழின் தலைநிமிர்வு



## புதுவருடத்தில் உலகப்பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவால்கள்

## புதுவருடத்தை டிரைஃபில் ஓடு வரவேற்போம்

## புதுவருடத்தில் புதிதாய் பிறப்போம்!

## இருப்பவர்க்கு ஒரு வீடு இல்லாதோருக்கு பலநாடு!

## புதுவருடத்தில் காலடி வைக்கும் இலங்கையின் சிவில் சமூகம்

# அரசியலமைப்பு பேரவையின் தமிழ் எம்.பி நியமனத்தில் தொடர்ந்தும் இழுபறி நிலை

அரசியலமைப்பு பேரவைக்கு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை நியமிப்பதில் தொடர்ந்தும் இழுபறிநிலை நிலவுவதாக, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பு பேர வைக்கு 7 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 3 சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் நியமிக்கப்படவுள்ளனர்.

அவர்களில் தற்போது 5 சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரும் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தநிலையில், எஞ்சிய ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெற்றிடத்திடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தனின் பெயரை தமிழ் தேசிய கூட்டமைப்பு முன்மொழிந்ததுடன், தமிழ்கட்சிகளும் ஆதரவு வழங்கியுள்ளன. இதற்கு உத்தர லங்கா சபாகய கட்சி எதிர்ப்பு வெளியிட்டதை அடுத்து, தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனமானது இழுபறி நிலையில் உள்ளதாக மனோ கணேசன் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், தர்மலிங்கம் சித்தார்த்தனின் நியமனத்திற்கு தொடர்ந்தும் அழுத்தம் வழங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, அரசியலமைப்பு பேரவையில் உள்வாங்கப்படவுள்ள மூன்று சிவில் சமூக செயற்பாட்டாளர்களில், மலையக இந்திய வம்சாவளி தமிழர் சார்பில் பிரதாப் ராமானுஜத்தின் பெயரை பரிந்துரைத்துள்ளதாக தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் குறிப்பிட்டார்.

# உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் தேற்கு மக்கள்

**வடக்கு கிழக்கில் பாதிப்பு குறைவு என்கிறது உலக வங்கி**

நாட்டின் மக்கள் தொகையில் 76 வீதம் பேர் உணவுப் பாதுகாப்பற்ற நிலையில் உள்ளதாகவும், உணவுப் பொருட்களை மாற்றியமைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதாகவும் உலக உணவுத் திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையின் உணவுப் பாதுகாப்பு தொடர்பான தனது சமீபத்திய அறிக்கையை வெளியிட்ட உலக உணவுத் திட்டம், 73 வீதமான மக்கள் விலை மற்றும் ஊட்டச்சத்து குறைந்த உணவை உட்கொள்வதாக குறிப்பிட்டுள்ளது. 52 வீதமானோர் உணவின் அளவைக் குறைத்துள்ளதாகவும், 40 வீத மக்கள் உணவு வேளையின் எண்ணிக்கையைக் குறைக்க விரும்புவதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, உணவுப் பாதுகாப்பின்மை பெரும்பாலும் தென் மாகாணத்தை பாதித்துள்ள நிலையில், மக்கள் தொகையில் பாதி பேர் அதாவது 48 வீதமானோர் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

உணவுப் பாதுகாப்பின்மை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை மிகக் குறைவாகப் பாதித்துள்ளதாக உலக உணவுத் திட்டம் குறிப்பிட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தின் மக்கள்தொகையில் 26 வீதமானோரும் வடமாகாணத்தின் 25 வீதமானோரும் உணவுப் பாதுகாப்பின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் அரசியல் கைதிகள் 31 பேரையும் உடன் விடுதலை செய்ய வேண்டும்

**தாம் எதிர்க்கப்போவதில்லை என்கிறார் சஜித்**



சிறைச்சாலைகளில் தற்போது உள்ள 31 தமிழ் அரசியல் கைதிகளும் விரைவில் விடுதலை செய்யப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசியல் தீர்வு காண்பதற்கு முன்னர் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் என்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துடன் நான் உடன்படுகின்றேன். காணி விவகாரமும், அரசியல் கைதிகள் விடயமும் அவற்றில் முக்கியம் பெறுகின்றன. சிறைகளில் தற்போது தமிழ் அரசியல் கைதிகள் 31 பேர் உள்ளனர் என்று நீதி அமைச்சர் தெரிவித்துள்ளார். அவற்றில் குற்றம் நிரூபிக்கப்பட்ட 15 பேரையும் பாதிக்கப்பட்ட தரப்புக்களுடன் பேசி பொதுமன்னிப்பில் ஜனாதிபதியால் விரைவாக விடுவிக்க முடியும்.

குற்றஞ்சாட்ட ஏனைய 16 பேர் மீதான வழக்கு விசாரணையைத் துரிதப்படுத்தி அவர்களையும் ஏதோவொரு வழியில் விரைந்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் அரசியல் கைதிகளை விடுதலைசெய்ய நாம் எந்த எதிர்ப்புக்களையும் வெளிப்படுத்த மாட்டோம் என்றும் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.




**சுவிட்சர்லாந்தை சேர்ந்த மதிவதனி எழுதிய காட்சிப் பிழைகள் (கவிதை தொகுப்பு) ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு தீர்வு (குழந்தை உளவியல் கட்டுரைகள்)ஆகிய இரண்டு நூல்களின் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு தமிழ்ச்சங்க விநோதன் மண்டபத்தில் (25) ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்ற போது இரண்டு நூல்களின் முதல் பிரதிகளை இலக்கிய புரவலர் ஹாசிம் உமருக்கு விழாவுக்கு தலைமை வகித்த ஞானம் சஞ்சிகையின் ஆசிரியர் டாக்டர் ஞானசேகரன் வழங்கி வைப்பதையும் அருகில் கவிஞர் மேமன் கவி, நூலாசிரியரை மதிவதனி உடன் ஏனைய நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்**

# உள்ளூராட்சித் தேர்தலில் மொட்டு கடும் தோல்வியை எதிர்கொள்ளும்

**பஸிலுக்கு அதிர்ச்சியைக் கொடுத்த கருத்துக் கணிப்பு**

உள்ளூராட்சித் தேர்தலை திட்டமிட்ட வகையில் மார்ச் மாதத்துக்கு முன்னதாக நடத்தவேண்டும் என எதிர்க்கட்சிகள் கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்துவரும் நிலையில், இரகசிய கருத்துக் கணிப்பு ஒன்றின் பெறுபேறுகளே அதனை ஒத்திவைக்க வேண்டும் என அரசாங்கம் முற்படுவதற்குக் காரணம் என்பது தெரியவந்திருக்கின்றது.

பொதுஜனபெரமுனவின் மூளை என வர்ணிக்கப்படும் அதன் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷ நடத்திய இரகசிய கருத்துக்கணிப்பு ஒன்றையடுத்தே இத்தோ்தலை ஒத்திவைப்பதற்கான வியுகங்களை அரச தரப்பு வகுத்துவருகின்றது. இந்தக் கருத்துக்கணிப்பில் பஸிலுக்கு அதிர்ச்சியளிக்கக்கூடிய இரண்டு விடயங்கள் வெளிப்பட்டுள்ளன.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி 51 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளை உள்ளூராட்சி மன்றங்களில் பெற்றுக்கொள்ளும் என்பது இந்தக் கருத்துக்கணிப்பில் வெளியாகியிருக்கும் முக்கிய தகவலாகும். அதனைவிட இரண்டாவது இடத்துக்கு பொதுஜன பெரமுனவுடன் ஜே.வி.பி. கடுமையாகப் போட்டியிடலாம் என்ற தகவலும் வெளிவந்திருக்கின்றது.

இதனையடுத்தே தேர்தலை எவ்வகையிலாவது ஒத்திவைக்க வேண்டும் என்பதற்காக பஸில் காய்நகர்த்திவருவதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. தேர்தல் குறித்து இவ்வார முற்பகுதியில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அது ஒரு வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டிருக்கின்றது.

தேர்தலுக்கான வேட்புமனுக்கள் கோரப்பட்ட பின்னரும் இதனை ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. அதற்கான உபாயங்களை வகுத்துச் செயற்படுவதற்கு அரச தரப்பு தற்போது முற்பட்டிருக்கின்றது. அதேவேளையில், ஜனாதிபதித் தோ்தலை அடுத்த வருட முற்பகுதியில் நடத்துவதற்கு ஏற்ற வகையில் அரசியலமைப்புத் திருத்தம் ஒன்றைச் செய்வதற்கும் அரச தரப்பு திட்டமிடுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ரோய்ட்டரின் சிறந்த புகைப்படங்களில் இலங்கையின் 3 போராட்டப் படங்கள்







ரொய்ட்டர் செய்திச்சேவையினால் வெளியிடப்பட்டுள்ள இந்த வருடத்திற்கான சிறந்த புகைப்படங்கள் பட்டியலில் இலங்கையில் எடுக்கப்பட்ட 3 படங்கள் இடம்பிடித்துள்ளன.

அந்த வகையில், கொழும்பில் இடம்பெற்ற அரகலய போராட்டத்தின் போது எடுக்கப்பட்ட மூன்று படங்கள் முக்கிய இடத்தை பிடித்துள்ளன. அதன்படி மே 19, ஜூலை 9 மற்றும் 13ஆம் திகதிகளில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது எடுக்கப்பட்ட மூன்று படங்களை ரொய்ட்டர் தெரிவு செய்துள்ளது.

2022 ஆம் ஆண்டு உலகின் பல பகுதிகளில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது எடுக்கப்பட்ட புகைப் படங்களில் 48 புகைப்படங்களை ரொய்ட்டர் தெரிவு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாணத்தில் ராஜ் இராஜரட்ணம்



இலங்கையில் பிறந்தவரும் அமெரிக்காவின் பெரிய செல்வந்தா்களில் ஒருவருமான ராஜ் இராஜரட்ணம் யாழ்ப்பாணம் வந்துள்ளார்.

யாழ். போதனா மருத்துவமனைக்கு சென்ற அவர் மருத்துவமனையின் செயற்பாடுகள் தொடர்பில் கேட்டறிந்தார்.

இதனிடையே, ராஜ்இராஜரட்ணம் அமெரிக்கா திரும்பும் முன்னர் அரசியல்வாதிகள் சிலரை சந்திக்கவுள்ளார் என்றும் அறியவருகிறது.

கடந்த 2007ஆம் ஆண்டு பங்குச் சந்தையை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டில் அமெரிக்காவின் புலனாய்வு பிரிவான எவ்.பி.ஐ. அவரை கைது செய்து சிறையில் அடைத்தது. அவரின் சொத்துக்களும் முடக்கப்பட்டன. எனினும், அவர் அந்த வழக்கில் போராடி தன்னை நிரபராதி என்று நிரூபித்தார்.

இந்நிலையில், சிறையில் இருந்த காலத்தில், அவர் எழுதிய ʼʼக்ணனு திஙுண ஒதண்ணுடிஞ்னுʼʼ என்னும் நூல் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு - ʼʼ விளைந்த நீதி ʼʼ- விரைவில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்படவுள்ளது என்றும் தெரியவருகின்றது.

# தமிழரசு மத்திய குழு ஜனவரி 7 இல் மட்டக்களப்பில் கூடுகிறது

## தமிழ்த் தேசியக் கட்சிகள் 8 இல் கொழும்பில் சந்திப்பு

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சுக்களை முன்னெடுப்பது குறித்து ஆராயத் தமிழ்த் தேசியக் கட்சிகள் அடுத்த மாதம் கொழும்பில் கூடவுள்ளன. எதிர்வரும் ஜனவரி 8ஆம் திகதி கொழும்பில் இந்தச் சந்திப்பு நடைபெறும் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

கடந்த கலந்துரையாடல் அவசர அவசரமாக இடம்பெற்ற நிலையில் இம்முறை அனைவரையும் அழைத்து கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி மட்டக்களப்பில் நடைபெற்று முடிந்த பின்னர் இந்தக் கூட்டம் நடைபெறவுள்ளது.



தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவின் கூட்டத்தை 6 ஆம் திகதி நடத்துவதாக முதலில் தீர்மானிக்கப்பட்ட போதும், அன்றைய தினம் பௌர்ணமி நாள் என்பதால் அது அடுத்த நாளுக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக இப்போது தெரியவருகின்றது.

இதேசமயம், தேசிய பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக அரசு ஏற்பாடு செய்துள்ள கட்சித் தலைவர்கள் கூட்டம் எதிர்வரும் 10,11,12,13 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. அதற்கு முன்னாயத்தமாகவே தமிழ்த் தேசியக் கட்சிகள் 8 ஆம் திகதி கொழும்பில் கூடுகின்றன.

அதேவேளை, எதிர்வரும் 10 முதல் 13 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள சர்வகட்சிக் கூட்டத்தின் முன்னாயத்த நடவடிக்கைகளுக்காகச் சம்பந்தன், சுமந்திரனை எதிர்வரும் 5 ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரச குழு உத்தியோகபற்றற்ற வகையில் சந்தித்துப் பேசவிருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. அந்தக் கூட்டத்துக்கு ஏனைய தமிழ்க் கட்சிகளும் அழைக்கப்படக் கூடும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.




**செய்தி:-**

சுதந்திரக்கட்சியை வைத்திருப்பது நாங்களே. டாலி வீதியில் இருப்பது வெறும் பெயர் பலகைமட்டுமே.

-மகிந்த அமரவீர-

இலங்கையை கட்டுப்பாட்டில வச்சிருக்கிறதும் வெளிநாடுகளே. உங்களிட்ட இருக்கிறது வெறும் வரைபடம் மட்டுமே!

# வியட்நாமில் அகப்பட்டிருந்த 152 இலங்கையர் நாடு திரும்பினர்

## விசாரணையின் பின் வீடுகளுக்கு அனுப்பப்பட்டனர்

சட்டவிரோதமாக கடல் மார்க்கமாக கனடாவுக்கு செல்ல முற்பட்ட நிலையில் வியட்நாம் கடல் எல்லையில் மீட்கப்பட்ட 303 இலங்கையர்களில் 152 பேர் நேற்று முன்தினம் நள்ளிரவு கொழும்பை வந்தடைந்தனர்.

நேற்று அவர்கள் சி.ஐ.டி.யினரால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டதாகவும், விசாரணைகளின் பின்னர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பிவைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

மியன்மாரிலிருந்து கனடா நோக்கி கப்பல் ஒன்றில் கடந்த நவம்பர் மாதம் எட்டாம் திகதி அவர்கள் பயணித்தபோது கப்பல் பழுதடைந்தமையை அடுத்து அவர்கள் ஜப்பானிய கப்



பல் ஒன்றினால் மீட்கப்பட்டு வியட்நாமிற்கு அழைத்து செல்லப்பட்டனர்.

இந்நிலையில் அவர்களில் 152 பேர், மீளவும் நாடு திரும்புவதற்கு இணக்கம் வெளியிட்டுள்ள நிலையில், அவர்களை விசேட விமானம் ஒன்றின் ஊடாக இலங்கைக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. அகதிகளுக்கான சர்வதேச நிறுவனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தது.

நேற்று முன்தினம் செவ்வாய்கிழமை நள்ளிரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்த அவர்கள் நேற்று பகல் சி.ஐ.டியினரால் விசாரணைக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களுடைய வாக்குமூலங்கள் பதியப்பட்டன. அதன்பின்னர் தத்தமது வீடுகளுக்கு அனுப்பப்பட்டதாக அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்திருக்கின்றது.

# பேச்சுவார்த்தைகள் தொடர்பில் சீனாவின் நிலைப்பாடு என்ன?

## யாழ். வந்த துணைத் தூதுவரிடம் கேள்வி

நாம் இந்தியாவின் கலாச்சாரத்தை ஒத்தவர்கள் என்பதனால் அதனை நாம் நாடி நிற்பது குறித்து சீனா அஞ்ச வேண்டிய தேவை கிடையாது என சீனத் துணைத் தூதுவரிடம் யாழ்ப்பாணப் பிரமுகர் ஒருவர் எடுத்துரைத்தார்.

இந்தியா - குறிப்பாக தமிழக - மக்களுக்கும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் உள்ள தொப்புள் கொடி உறவைத் தாங்கள் புரிந்து கொள்கிறார்கள் என சீனத் தூதுவர் பதிலளித்தார்.

யாழ்ப்பாணத்திற்கு நேற்று மாலை வந்த சீனாவின் துணைத் தூதுவரையும் குழு வினரையும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரமுகர் குழு ஒன்று நேற்று இரவு ஓர் விடுதியில் சந்தித்தனர். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

இதேநேரம் போரின்போது பாதிக்கப் பட்ட தரப்புடன் அன்றி, பாதிப்பை ஏற்படுத்திய தரப்புடனேயே சீனா நின்றமை வருத்தமளிக்கின்றது என்பது பிரமுகர்கள் தரப் பில் கூறப்பட்டது.

''இறுதிப் போரின்போது சீனா மட்டு மல்ல, இந்தியா, அமெரிக்கா உட்பட பல நாடுகள் இலங்கை அரசிற்கு உதவியமையும் எமக்குத் தெரியும். ஆனால் மற்ற நாடுகள் தற்போதேனும் தங்களை மாற்றிக்கொண்டாலும் சீனா இன்று வரை சீனா இன்று வரை அதனை மாற்றவோ அல்லது பாதிப்புற்றோர் தரப்பைப் பரிவுடன் அணுகவோ தயார் இல்லை.

இதேநேரம் எமக்காக குரல்கொடுக்க முடியாது. நாம் அரசிற்கு - அரசு என்ற ரீதியில்தான் செயற்பட முடியும் என சீனா கருதினால், தற்போது இலங்கை அரசிற்கும் தமிழர் தரப்பிற்கும் இடையில் ஒரு பேச்சுவார்த்தை ஏற்பாடு இடம்பெறுகின்றது. அந்தப் பேச்சுவார்த்தையாவது வெற்றியளிக்க வேண்டும் என்று ஒரு வாழ்த்து அறிக்கையையாவது சீனாவால் வெளியிட முடியுமா? எனக் கேட்டபோதும் சீன அதிகாரிகள் அதற்கும் மறுத்துவிட்டனர்.



அமெரிக்காவின் Heart to Heart International அமைப்பினால் இலங்கைக்கு 7.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மருத்துவ பொருட்கள் தொகை நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளன. அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் மகிந்த சமரசிங்க தனது டுவிட்டர் கணக்கில் வெளியிட்டுள்ள பதிவில் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

## கிளிநொச்சி யுவதியை பட்டப்பகலில் கடத்திச்சென்ற போதைக் கும்பல்

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உதயநகர் பகுதியில் வாசித்து வரும் 22 வயது பெண் ஒருவரை ஆறு பேர் கொண்ட குழு நேற்று புதன்கிழமை மாலை முச்சக்கரவண்டியில் கடத்திச்சென்றுள்ளது.

உதயநகர் பகுதியில் வசிக்கும் யுவதியொருவர், சில காலமாக இளைஞர் ஒருவரை காதலித்துள்ளார். இளைஞன் போதைப் பொருளுக்கு அடிமையான என்பதை பின்னர் அறிந்ததும், அவரை திருமணம் செய்ய மறுத்து வந்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த காதலன் போதை தலைக்கேறிய நிலையில் போதை தலைக்கேறிய நிலையில், இன்னும் சிலருடன் சேர்ந்து யுவதியின் வீட்டுக்குள் புகுந்து தாய் மற்றும் தம்பியை தாக்கிவிட்டு யுவதியை முச்சக்கரவண்டியில் இழுத்துச் சென்றுள்ளார்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# ஜனவரி மாதம் முதல் அமுலாகும் பயணப் பதிவு அட்டை முறைமை

எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் இலங்கைக்கு பிரவேசிக்கும் மற்றும் நாட்டிலிருந்து வெளியேறும் வெளிநாட்டவர்கள் மற்றும் இலங்கையர்கள், வருகை மற்றும் புறப்பாடு அட்டையை இணையத்தளத்தில் பூர்த்திசெய்ய வசதி செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.immigration.gov.lk அல்லது eservices.immigration.gov.lk என்ற இணையத்தளத்திற்குச் செல்வதன் மூலம், புறப்படுவதற்கு அல்லது வருவதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் உரிய அட்டையை நிரப்புவதற்கான வசதிகள் உள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்தில் பயணிகளுக்கு ஏற்படும் அசௌகரியங்களை தவிர்க்கும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழ் ஒலை

மின்னஞ்சல்: aruvitamil812@gmail.com
வாட்ஸ் ஆப் இலக்கம்: 0094 768 320 733

## வரி , வட்டி , கொவிற்!

**ஜனவரி** இறுதி வாரத்தை கறுப்பு போராட்ட வாரமாக பிரகடனப்படுத்தவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறைகூவல் விடுத்துள்ளது.

நாடு எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பில் அதிக வரிகளை அறவிட அரசாங்கம் தன்னிச்சையாக எடுத்த முடிவு காரணமாக துறைசார் மருத்துவ நிபுணர்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுப்பதால் தாம் இந்த போராட்டத்தைமுன்னெடுக்கவுள்ளதாக சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் கலாநிதி சமில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 20,000 வைத்தியர்களிடம் கையெழுத்து சேகரிக்கப்பட்டு அவை ஜனவரி 10ம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் மகஜராக கையளிக்கப்படவுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பணவீக்கத்தின் பாரதூரமான விளைவை மக்கள் எதிர்கொண்டுள்ள இந்த வேளையில் மருத்துவ கட்டணங்களும்இதனால் உயரவாய்ப்புண்டு.

இதேவேளை. இலங்கையில் தற்போது கொவிற் பரவல் மீண்டும் தலைதூக்கியுள்ளது. கடந்த வாரம் 42 பேர் கோவிட் நோயால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், ஒருவர் உயிரிழந்துள்ளதாகவும் தொற்று நோயியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தற்போது நிலவும் மோசமான காலநிலையால் கோவிட் தொற்றின் தாக்கம் அதிகரித்துள்ளதால், சுகாதார விதிகள் மற்றும் விதிமுறைகளை முடிந்தவரை பின்பற்றுமாறு மருத்துவர்கள் மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளனர்.

தொற்றுநோயியல் துறையின் தரவுகளின்படி, இலங்கையில் பத்தாயிரத்து அறுபத்தைந்து பேர் கொவிற் நோயினால் காவு கொள்ளப்பட்டுள்ளனர். மேலும் சுமார் 6 இலட்சத்து 55ஆயிரம் பேர் கோவிட் நோயால் பாதிக்கப்பட்டு குணமடைந்துள்ளனர்.

மருந்துகள் மற்றும் வைத்திய உபகரணங்களின் தட்டுப்பாடு நிலவும் இக்காலகட்டத்தில். நிலவும் மோசமான காலநிலை கொவிற்பரவலை அதிகரிக்கக் கூடும் எனும் மருத்துவர்களின் எச்சரிக்கையை நாம் புறந்தள்ளி விடலாகாது. சுகாதார நெறிமுறைகளை பிறக்கும் புத்தாண்டில் கவனமாக கடைப்பிடிப்போம்.

**பிறக்கவிருக்கும் ஆங்கிலப்புத்தாண்டில் வாசகர்களுக்கு நோயற்றவாழ்வும் மனத்திடமும், கனவுகள் கைகூடும் எதிர்காலமும் அமைய தமிழருவி பிரார்த்திக்கிறது.**




# இருப்பவர்க்கு ஒரு வீடு இல்லாதோருக்கு பலநாடு!

**பவித்திரா**

**நான்கு** வருடங்களுக்கு முன்னர் ஒரு அமெரிக்க பிரஜையாக இருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு இப்போது அமெரிக்கா என்பது ஒரு எட்ட முடியாத கனவாகிவிட்டது.

கடந்த 26 ஆம் திகதி அதிகாலை 2.55 மணியளவில் கொழும்பு, கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து கோட்டாபய ராஜபக்ஷ தனது மனைவி மற்றும் மகனின் குடும்பத்தினருடன் டுபாய் புறப்பட்ட விமானத்தில் ஏறியபோது, அவர்கள் அமெரிக்காவுக்குச் செல்கின்றார்கள் என்றே செய்தி பரவியது.

இருந்த போதிலும், அவர்கள் அமெரிக்கா செல்லவில்லை என்றும், சில தினங்களுக்கு டுபாயில்தான் தங்கியிருப்பார்கள் என்றும் இப்போது தெரிவிக்கப்பட்டுள்ளது. அங்கிருந்து ஐரோப்பிய நாடொன்றில் நிரந்தரமாகத் தங்குவதற்கும் கோட்டாபய திட்டமிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடொன்று கோட்டாபயவை ஏற்றுக் கொள்ளுமா? அவருக்கு அரசியல் தஞ்சமளிக்க முன்வருமா? என்பன பிரதான கேள்விகளாகவுள்ளன. அவ்வாறு தஞ்சம் கிடைக்கவில்லை என்றால் மீண்டும் இலங்கை திரும்புவதைவிட அவருக்கு வேறு வழியிருக்கப்போவதில்லை. ரணில் என்னும் தோழன்

கொழும்பில் வெடித்த மக்கள் கிளர்ச்சியை அடுத்து மாலைதீவுக்குத் தப்பிச்சென்ற கோட்டாபய பின்னர் அங்கிருந்து சிங்கப்பூர் சென்று, தனது ஜனாதிபதி பதவியை ஜூலை 13 ஆம் திகதி ராஜினாமா செய்தார். அப்போது ரணில் விக்கிரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக நியமித்த அவர், முக்கியமான கோரிக்கை ஒன்றையும் ரணிலிடம் முன்வைத்திருந்தார். தான் அமெரிக்கா செல்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து தாருங்கள் என்பதுதான் அவரது கோரிக்கை.

ரணில் விக்கிரமசிங்க அமெரிக்காவுக்கு நெருக்கமான ஒருவராகக் கருதப்படுபவர். அதனால், இதனை ரணிலினால் செய்யக்கூடியதாக இருக்கும் என கோட்டா கருதியிருக்கலாம். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக அமெரிக்க பிரஜாவுரிமையைத் துறந்த கோட்டாபய, பதவியிலிருந்து விரட்டப்பட்டபோது, அமெரிக்க வீசாவைக்கூட பெறமுடியாத நிலைக்குள்ளானார். இந்த நிலையிலேயே ரணிலின் உதவியை கோட்டா நாடினார்.

ஆனால், கோட்டாவின் விசா விண்ணப்பத்தை நிராகரிப்பது என்பதில் உறுதியாகவிருந்த அமெரிக்க தூதரகத்தைப் பொறுத்தவரையில், ரணிலின் கோரிக்கையை ஏற்கத் தயாராகவிருக்கவில்லை. இதனால்தான், சிங்கப்பூர், தாய்லாந்து என சுற்றித் திரிந்த கோட்டாபய, அந்த நாடுகள் தொடர்ந்தும் தனக்குப் பாதுகாப்பை வழங்கத் தயாரில்லை என்பதை உணர்ந்த நிலையில் கொழும்பு திரும்புவதற்குத் தீர்மானித்தார். மேற்கு நாடுகளிலோ மத்திய கிழக்கு நாடுகளிலோ அரசியல் அடைக்கலம் கோருவதற்கும் கோட்ட்டாபய மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியடைந்தமையும் கொழும்பு திரும்ப அவரை நிர்ப்பந்தித்தது. மறுபக்கத்தில், தன்னுடைய பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கூடிய நிலையில் ரணில் விக்கிரமசிங்க இருக்கின்றார் என்பதையும் உணர்ந்துகொண்ட நிலையில்தான் அவர் கொழும்பு திரும்பும் முடிவை இறுதியாக எடுத்தார். ஞானம் பிறந்தது

மீண்டும் அமெரிக்காவுக்கோ அல்லது மேற்கு நாடு ஒன்றுக்கோ செல்ல வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர் இருப்பதற்கு இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஒன்று இலங்கையில் தனக்கு அரசியலில் எதிர்காலம் இருக்கப்போவதில்லை என்பதை அவர் தெளிவாக உணர்ந்துகொண்டிருக்கின்றார். தமது சகோதரர்களே அதனை விரும்பவில்லை என்பதையும் அவர் தெரிந்துகொண்டிருக்கின்றார்.

இரண்டாவதாக, இலங்கையில் இருப்பது எதிர்காலத்தில் தமது பாதுகாப்புக்கு ஆபத்தாகலாம் என்ற அச்சமும் அவருக்குள்ளது. இதனால், அவரது குடும்பத்தினரும் அவர் தொடர்ந்தும் இலங்கையில் இருப்பதை விரும்பவில்லை. இந்தப் பின்னணியில்தான் அமெரிக்காவில் உள்ள அவரது ஒரே மகன் தற்போது குடும்பத்துடன் கொழும்பு வந்து பெற்றோரை டுபாய்க்கு அழைத்துச் சென்றிருக்கின்றார். அவரது அடுத்த கட்ட நகர்வு என்ன என்பதைத்தான் இலங்கை மக்கள் இப்போது உற்று நோக்கிக்கொண்டிருக்கின்றார்கள். அமெரிக்க கனவு நனவானது எப்படி ?

இந்த வேளையில், அமெரிக்க பிரஜைவுரிமையை கோட்டாபய எவ்வாறு பெற்றுக்கொண்டார் என்ற பழைய கதையை திரும்பிப்பார்ப்பதும் சுவாரஸ்யமாக இருக்கும்.

லெப்டினன்ட் கேணல் நந்தாச கோட்டாபய ராஜபக்ஷ, 1990 களில் பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்த காலத்தில் இராணுவத்தில் கடமையாற்றியவர். இராணுவத்திலிருந்து விலகி வெளிநாடு செல்வதற்கு அவர் அப்போது திட்டமிட்டார். இராணுவம் தொடர்ந்து சந்தித்துவந்த இழப்புக்கள்தான் இதற்குக் காரணம் என்பது சொல்லத்தேவையில்லை. எதிர்க்கட்சியிலிருந்த தன்னுடைய சகோதரர் மகிந்த ராஜபக்ஷவிடம் இதற்கான உதவியை அவர் கோரினார். மகிந்த இந்தப் பொறுப்பை அநுரா பண்டாரநாயக்கவிடம் ஒப்படைத்தார்.

இதற்காக, இரண்டு வேலைகளைச் செய்யவேண்டிய பொறுப்பு அநுராவுக்கு ஏற்பட்டது. முதலாவதாக அப்போதைய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரட்ணவுடன் தொடர்புகொண்ட அநுரா, இராணுவத்திலிருந்து கோட்டாபய வெளியேறுவதற்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார். இராணுவ அதிகாரி ஒருவர் அதிலிருந்து விலக வேண்டுமானால், பாதுகாப்பு அமைச்சின் அனுமதி அவசியம். அதனைப் பெற்றுக்கொண்ட பின்னர் அமெரிக்க தூதரகத்துடன் தொடர்புகொண்டு கோட்டாபயவும் குடும்பத்தினரும் அமெரிக்கா செல்வதற்கான விசாவையும் அநுரா பண்டாரநாயக்கவே பெற்றுக்கொடுத்தார்.




அமெரிக்கா சென்ற பின்னர் அந்நாட்டுப் பிஜைாவுரிமையைப் பெற்றுக்கொள்வதிலும் கோட்டாபய பல சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. அவரது குடும்பத்தினர் அனைவருக்குமே அமெரிக்க பிரஜாரிமை கிடைத்தது.

2005 இல், அவர் இலங்கை திரும்பி மகிந்தவின் ஜனாதிபதி தேர்தல் பிரச்சாரத்திற்கு உதவினார். ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றிபெற்றதன் பின்னர், கோட்டாபய அமெரிக்கா செல்லவிருந்த வேளையில், பாதுகாப்புச் செயலாளர் பதவியை ஏற்குமாறு மகிந்த கோட்டாவிடம் கோரினார். அப்போது கோத்தபாய அமெரிக்க குடியுரிமையை கைவிடவில்லை. ஆனால், 2019-ம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடிவு செய்த அவர், அமெரிக்க குடியுரிமையை துறந்தார்.

இப்போது சுமார் ஐந்து மாதங்களாக அமெரிக்க வீசாவைப் பெறுவதற்குக் கூட அவருக்கு முடியாதுள்ளது. கோட்டாபயவால் அமெரிக்காவுக்குச் சென்று அந்த நாட்டின் குடியுரிமையை அவரது மகனும், மனைவியும் பெற்றுக்கொண்ட போதிலும் கூட, அவருக்கும் அமெரிக்க விசா என்பது இன்று எட்டாத ஒரு கனவாகிவிட்டது!



# இதுவும் கடந்து போகும்...

## விடைபெறும் ஆண்டு விட்டுப்போகும் சில நினைவுகள்!



சோபிகா
கிருஷ்ணமூர்த்தி



மக்கள் எழுச்சி போராட்டத்தினால் கோட்டாபய பதவி துறந்தார்



ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவியேற்றமை



உலகம் முழுவதும் பணவீக்கம் அதிகரித்து வந்தமை



ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே, துப்பாக்கி சூட்டில் உயிரிழப்பு!





ஐரோப்பா கண்டத்தில் 500 ஆண்டுகளில் இல்லாத வறட்சி






உலக மக்கள் தொகை 8 பில்லியனைத் தாண்டியுள்ளமை





அமெரிக்க உச்ச நீதிமன்றம் கருக்கலைப்பு உரிமையை ரத்து செய்தமை



கிழக்கு அண்டார்டிகாவில் ராட்சத பனி அடுக்கு சரிவு



மனித இரத்தத்தில் மைக்ரோபிளாஸ்டிக்ஸ் கண்டுபிடிக்கப்பட்டமை



3 டிரில்லியன் டாலர் பங்குச் சந்தை மதிப்பை எட்டிய முதல் நிறுவனம் ஆப்பிள் நிறுவனம்





பிரிட்டன் பிரதமராக பதவியேற்றார் ரிஷி சுனக்



ஹிஜாப் விவகாரத்தால் போர்க்களமாக மாறிய ஈரான்



பிரித்தானியனிய எலிசபத் மகாராணியின் மரணம்



36 ஆண்டுகளுக்கு பிறகு உலகக்கோப்பையை வென்றது அர்ஜென்டினா



உலகக் கோப்பை கால்பந்தில் போட்டிகளைப் போலவே ஸ்டெபானி ஃப்ராபார்ட்டின் பெயரும் பரபரப்பாகி இருக்கிறது. 92 ஆண்டுகால உலகக் கோப்பை வரலாற்றில் முதல்முறையாக ஜெர்மனி, கோஸ்டா ரிகா போட்டி முழுவதையும் பெண்களே நடுவர்களாக இருந்து நடத்தி முடித்துள்ளனர்.

# நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகுங்கள்

## தி.மு.க. நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் அறிவுறுத்தல்

நாடாளுமன்றத் தேர்தலுக்கு தயாராகுங்கள் என்று திமுக நிர்வாகிகளுக்கு முதலமைச்சரும் திமுக தலைவருமான மு.க. ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.



சென்னை அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில், திமுக தலைவர் ஸ்டாலின் தலைமையில் அனைத்து அணிகளின் நிர்வாகிகள் மற்றும் குழுக்களின் உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. இதில் திமுக பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி ஆர் பாலு உள்ளிடோர் பங்கேற்றனர். திமுகவின் 11 குழுக்களின் உறுப்பினர்கள், 23 அணிகளின் மாநில நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

அணிகளின் உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்துவது, நாடாளுமன்ற தேர்தலுக்கான குழுக்களை ஏற்படுத்துவது, தொடர் கூட்டங்கள் நடத்துவது உள்ளிட்டவை குறித்து அறிவுறுத்தப்பட்டது. திமுக அரசின் சாதனைகளை பரப்பும் வகையில் சமூக ஊடகங்கள், தேநீர்க்கடை, திண்ணை பரப்புரைகளை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டதாகத் தெரிகிறது.

இக்கூட்டத்தில் பங்கேற்ற நிர்வாகிகளிடையே பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், நாடாளுமன்ற தேர்தலுக்கு தயாராகுங்கள் என்று நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தினார். நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி கொள்ள பாஜகவினர் எதையும் செய்ய தயங்கமாட்டார்கள் என்றும் அதனை எதிர்கொள்ள தயாராக இருங்கள் என்றும் அவர் கூறினார். கட்சியின் அணிகளில் வழங்கப்பட்ட பொறுப்பை பெருமையாக கருதிக்கொண்டு இருக்காமல் களத்தில் பணியாற்ற வேண்டும் எனறும் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நிர்வாகிகளைக் கேட்டுக்கொண்டார்.




# சென்னை விமான நிலையத்தில் பாம்புகள், குரங்குகள் பறிமுதல்



சென்னை விமான நிலையத்தில் பாம்புகள், குரங்குகள் பறிமுதல் செய்யப்பட்டன.


தாய்லாந்து தலைநகர் பாங்காக்கில் இருந்து விமானம் சென்னைக்கு நேற்று வந்தது. பயணிகளையும், அவர்களின் உடைமைகளையும் சுங்கத்துறை அதிகாரிகள் சோதனை செய்தனர். அப்போது ராமநாதபுரத்தை சேர்ந்த இரண்டு பயணிகள் மீது அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது.

அவர்கள் கொண்டு வந்திருந்த பிளாஸ்டிக் கூடைகளை சோதனை செய்தபோது, தாய்லாந்து நாட்டு வனப்பகுதியில் காணப்படும் அரிய வகை 40 மலைப்பாம்பு குட்டிகள், 13 நாகப் பாம்பு குட்டிகள், 5 குரங்கு குட்டிகள் இருந்தன. வனவிலங்குகள் குற்றப்பிரிவு துறையினர் வந்து ஆய்வு செய்ததில், நாகப்பாம்புகள் கொடிய விஷம் உடையவை என தெரிவித்தனர். பாம்பு, குரங்குகளை பறிமுதல் செய்த அதிகாரிகள் இருவரையும் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# புத்தாண்டு கொண்டாட்டங்களில் மக்கள் கட்டுப்பாட்டை கடைப்பிடிக்க வேண்டும்

## அமைச்சர் மா.சுப்பிரமணியன்

புத்தாண்டு கொண்டாட்டங்களில் பொதுமக்கள் சுய கட்டுப்பாட்டை கடைபிடிக்க வேண்டும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.



மாண்டஸ் புயல் காரணமாக, சென்னை சைதாப்பேட்டை 168 வது வார்டு நெருப்பு மேடு பகுதியை சேர்ந்த லட்சுமி என்பவர் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்தது சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். அவரது குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து ரூ.4 லட்சம் ரூபாயை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள அவரது சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் வழங்கினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர் மா.சுப்பிரமணியன், ‘சென்னை சைதாப்பேட்டையில் மாண்டஸ் புயலால் உயிரிழந்த லட்சுமி என்பவர் குடும்பத்திற்கு முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து 4 லட்சம் ரூபாய் நிவாரணம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த 3 வயது குழந்தை எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்து வருகிறார். உயிரிழந்த பெண்ணின் கணவர் மாற்றுத்திறனாளி என்பதாலும், ஏற்கனவே அவர் சைக்கிள் கடையில் கூலித்தொழிலாளியாக உள்ள நிலையில் சைதை திமுக சார்பில் அவருக்கு சைக்கிள் கடை வைத்து தர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

# மத்திய அரசு பணிகளில் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்க தீர்மானம் நிறைவேற்ற வேண்டும்

## அன்புமணி ராமதாஸ்

மத்திய அரசு பணிகளில் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்க சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்று பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அன்புமணி ராமதாஸ் தனது ட்விட்டர் பக்கத்தில், தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்கள், பொதுத்துறை நிறுவனப் பணிகளில் தமிழர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும்; தமிழில் தேர்வு நடத்த வேண்டும் என்று பிரதமருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியிருக்கிறார். இது மிகவும் வரவேற்கத்தக்கதாகும்.

தெற்கு தொடர்வண்டித்துறைக்கு அண்மையில் தேர்ந்தெடுக்கப்பட்ட ஊழியர்களில் 80 விழுக்காட்டினர் வட இந்தியர்கள் என்பதை நான் சுட்டிக்காட்டியிருந்தேன். அதைத் தொடர்ந்து இத்தகைய கடிதத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியிருப்பது மனநிறைவு அளிக்கிறது. தமிழகத்தில் மத்திய அரசு பணிகள் மற்றும் பொதுத்துறை பணிகளில் தமிழர்களுக்கு மாநில ஒதுக்கீடு பெற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும். இதை வலியுறுத்தி வரும் 9-ஆம் தேதி தொடங்கப்படவுள்ள சட்டப்பேரவைக் கூட்டத்தில் அரசினர் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டும்.

தமிழ்நாட்டில் உள்ள தனியார் நிறுவனங்களின் வேலை வாய்ப்புகளில் 80% தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டும். இதை நடைமுறைப்படுத்துவதற்கான சட்டத்தையும் சட்டப்பேரவையில் நிறைவேற்ற தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# சீனாவில் இருந்து மதுரை வந்த 2 பெண்களுக்கு கொரோனா தொற்று உறுதி

## உடன் பயணித்த 70 பேருக்கும் பரிசோதனை

சீனாவிலிருந்து மதுரை வந்த 2 பெண்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து உடன் பயணித்த 70 பேருக்கும் பரிசோதனை மேற்கொள்ளபட உள்ளதாக சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சீனா, ஜப்பான், அமெரிக்கா, தென் கொரியா உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட நாடுகளில் உருமாற்றமடைந்த பிஎஃப் வகை கொரோனா தொற்று பரவி வருகிறது. இதையடுத்து அனைத்து சர்வதேச விமானநிலையங்களிலும் பயணிகளுக்கு கட்டுப்பாடுகள் அதிகரிக்கப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் கடந்த 3 தினங்களில் 39 சர்வதேச பயணிகளுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில், சீனாவில் இருந்து மதுரை வந்த 2 பெண்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.



இதுகுறித்து கூறிய சுகாதாரத்துறை அதிகாரிகள், இலங்கையிலிருந்து நேற்று காலை மதுரை வந்த விமானத்தில் 72 பயணிகள் வந்தனர். அவர்களில் 15 பேருக்கு ரேண்டம் முறையில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பரிசோதனை முடிவுகள் வெளியான நிலையில் 2 பேருக்கு கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

விசாரணையில் சீனாவிலிருந்து இலங்கை வழியாக மதுரை வந்த 39 வயது பெண் மற்றும் 5 வயது குழந்தைக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இவருடன் பயணித்த 15 வயது சிறுமிக்கு கொரோனா இல்லை. இது உருமாற்றம் அடைந்த கொரோனா வைரசா? என்பதை கண்டறிய மரபணு பரிசோதனைக்கு அனுப்பட்டுள்ளது. அக்கிராம மக்களை சந்தித்து பதட்டபட வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அவர்களுடன் பயணித்த 70 பேருக்கும் கொரோனா பரிசோதனை மேற்கொள்ளப்பட உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# பெப்ரவரி 24 இல் புதிய வரவு செலவுத் திட்டம்

2023 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அடுத்த ஆண்டு பெப்ரவரி 24 அன்று மத்திய அரசு தாக்கல் செய்ய உள்ளது.

இதற்கு முன்னதாகப் பெப்ரவரி 13 அன்று 15 வது நாடாளுமன்றத்தின் பிரதிநிதிகள் சபையின் முதல் கூட்டத்துடன் இணைந்து அரச உரை இருக்கும்.

பிரதமரும் நிதியமைச்சருமான அன்வார் இப்ராகிம் பட்ஜெட் 2023ஐ தாக்கல் செய்வதற்கு முன் ஏழு நாட்களுக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதம் நடத்துவார்கள்.




2023 பட்ஜெட் விவாதம் 18 நாட்கள் நடைபெறும். கடைசி இரண்டு நாட்கள் - மார்ச் 29 மற்றும் மார்ச் 30 - மற்ற அரசாங்க மசோதாக்களுக்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த ஆண்டின் தொடக்கத்தில், இஸ்மாயில் சப்ரி யாகோப் நிர்வாகம் பட்ஜெட் 2023 மீதான விவாதங்களுக்கு 28 நாட்கள் திட்டமிட்டிருந்தது. எனினும், விவாதங்கள் நடைபெறுவதற்கு முன்னர் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது.

அன்வார் அரசாங்கத்தைப் பொறுப்பேற்ற பிறகு, ஜனவரி 1, 2023 அன்று வழங்கப்படும் பொது சேவை ஊதியங்களுக்கான நாடாளுமன்ற ஒப்புதலை உறுதி செய்வதற்காக டிசம்பர் 19 அன்று நாடாளுமன்றம் மினி பட்ஜெட்க்கு ஒப்புதல் அளித்தது.

நாடாளுமன்றம் மீண்டும் ஜூன் 12 ஆம் தேதி தொடங்கி இந்த அமர்வு ஜூன் 27 வரை நீடிக்கும்.

மூன்றாவதும் இறுதியுமான கூட்டம் அக்டோபர் 9ஆம் தேதி தொடங்கி நவம்பர் 30ஆம் தேதி முடிவடையும்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தாக்கல் அடுத்த ஆண்டு நவம்பர் 19 ஆம் தேதி நடைபெற உள்ளது.

மொத்தத்தில், நாடாளுமன்றம் 71 நாட்களுக்குச் சந்திக்க திட்டமிடப்பட்டுள்ளது, இது 2019 தொற்றுநோய்க்கு முந்தைய 68 நாட்களைவிட சற்று அதிகமாகும்.

# பத்தாங் காலி நிலச்சரிவு மலேசியாவின் இரண்டாவது மிக மோசமான பேரழிவு

## அதிகாரிகள் தகவல்

1993 ஆம் ஆண்டில் 48 உயிர்கள் பலியாகிய ஹைலேண்ட் டவர்ஸ் அடுக்குமாடி குடியிருப்பு இடிந்து விழுந்ததைத் தொடர்ந்து டிசம்பர் 16 ஆம் தேதி பத்தாங் காலியில் உள்ள Father's Organic Farm ஏற்பட்ட நிலச்சரிவு இறப்புகளைப் பொறுத்தவரை மலேசியாவின் இரண்டாவது மோசமான பேரழிவாகும் என்று சிறப்பு மலேசிய பேரிடர் உதவி மற்றும் மீட்புக் குழு தெரிவித்துள்ளது.



அதிகாலை 2.30 மணியளவில் ஏற்பட்ட நிலச்சரிவில் 31 பேர் பலியாகினர். 61 பேர் உயிர் தப்பினர். பலியானவர்களில் 18 பேர் பெரியவர்கள், 13 பேர் குழந்தைகள். மீட்புக்குழு கமாண்டர் முகமட் கைருல் ஜமீல், நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையைக் கண்டு அதிர்ச்சியடைந்ததாகக் கூறினார்.

முந்தைய நிலச்சரிவில், மூன்று அல்லது நான்கு பேர் மட்டுமே சம்பந்தப்பட்டிருந்தனர், இந்த முறை கிட்டத்தட்ட 100 பேர் பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டபோது நான் அதிர்ச்சியடைந்தேன் என்று அவர் கூறினார்.

பின்னர் மீட்புக்குழுவின் மற்றொரு பிரிவுத் தலைவர் முகமது ஹபீசுல் அப்துல் ஹலிம் தலைமையிலான 10 பேர் கொண்ட குழுவைச் சம்பவம் நடந்த இடத்திற்குச் செல்லுமாறு நான் உத்தரவிட்டேன். இந்தப் பத்தாங் காலி சம்பவம் ஹைலேண்ட் டவர்ஸுக்குப் பிறகு பலியானவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது பெரியது, என்று அவர் இன்று பெர்னாமா டிவியின் அபா கபார் மலேசியா நிகழ்ச்சியில் கூறினார்.

இதற்கிடையில், சம்பவம் நடந்த இடத்தில் தனது குழுவின் பணி தேடல் மற்றும் மீட்பு (search and rescue) பணிகளுக்கு உதவுவதும் அறிவுறுத்துவதும் ஆகும், இதனால் இது மிகவும் திறம்பட மேற்கொள்ளப்படலாம் என்று ஹபீசுல் கூறினார்.

சம்பவத்தின் முதல் நாளில் தனது குழு எடுத்துச் சென்ற உபகரணங்களில் பூமியின் இயக்கங்களைக் கண்காணிக்கப் பயன்படுத்தப்படும் கட்டமைப்பு இயக்கச் சென்சார்கள் உள்ளன, அவை மீட்பாளர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடும் என்று அவர் கூறினார்.

சுமார் 20 மீட்டர் ஆழம் கொண்ட மணல் மற்றும் குப்பைகளால் மூடப்பட்ட பகுதியில் கனரக இயந்திரங்களைப் பயன்படுத்துவது குறித்து ஆலோசனை வழங்கும் பணியில் எங்கள் குழு ஈடுபட்டுள்ளது.

வெள்ளத்தைச் சமாளிப்பதற்கான தயாரிப்புகள்குறித்து, திரங்கானு மற்றும் கிளந்தானில் உள்ள தொடர்புடைய நிறுவனங்களுக்கு உதவ இரண்டு ஸ்மார்ட் குழுக்கள் அனுப்பப்பட்டுள்ளதாகக் கைருல் கூறினார்.

பாதிக்கப்பட்டவர்களை மீட்பதில் பிற அரசு நிறுவனங்களுக்கு உதவுவதற்காக நிறுத்தப்பட்ட குழுக்கள் தங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்து வருகின்றன, என்று அவர் கூறினார்.

# பெரும்பாலான நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் பூமிபுத்ராக்கள்

## சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு காட்டுகிறது



வணக்கம் மலேசியா

மலேசியர்களில் முக்கால்வாசி பேர் நகர்ப்புற அமைப்புகளில் வாழ்கின்றனர், பெரும்பாலான நகர்ப்புறங்களில் வசிப்பவர்கள் பூமிபுத்ரா இனத்தைச் சேர்ந்தவர்கள், சமீபத்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவு காட்டுகிறது.

2020 ஆம் ஆண்டின் மலேசிய மக்கள்தொகை மற்றும் வீட்டுவசதி கணக்கெடுப்பின்படி, சுமார் 14.1 மில்லியன்(62.6%) - நகர்ப்புறவாசிகள் பூமிபுத்ரா, அதைத் தொடர்ந்து சீன இனத்தினர் 6.4 மில்லியன்(28.6%), இந்தியர்கள் 1.8 மில்லியன் (8.1%), மற்றும் பிற இனங்கள் 0.2 மில்லியன் (0.7%).

கடந்த 2010ஆம் ஆண்டு மக்கள்தொகைக் கணக்கெடுப்புடன் ஒப்பிடும்போது பூமிபுத்ரா விகிதாச்சாரமும் வளர்ந்துள்ளது, நகர்ப்புறங்களில் 58.9% பேர் பூமிபுத்தராவாக உள்ளனர் என்று மலேசிய புள்ளிவிபரத் துறை இன்று ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இது தேசிய மக்கள்தொகையை ஓரளவு பிரதிபலிக்கிறது, மேலும் 19%0களில் மலேசியர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் மட்டுமே நகரவாசிகளாக இருந்த நகர்ப்புறங்களின் மக்கள்தொகைக்கு முற்றிலும் மாறுபட்டது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மீண்டும் கொண்டு வர வேண்டுமா என்ற விவாதத்தில் நகர்ப்புற மக்கள் தொகை, குறிப்பாக இன அடிப்படையில் முக்கியப் பிரச்சினையாக உள்ளது

மூன்றாவது வாக்கெடுப்பு 1964 இல் இந்தோனேசியா-மலேசியா மோதலுக்கு மத்தியில், அது வகுப்புவாத அமைதியின்மையை உருவாக்குகிறது என்ற வாதத்தில் இடைநிறுத்தப்பட்டது. உள்ளாட்சி சட்டம் 1976ன் மூலம் இடைநீக்கம் நிரந்தரமாக்கப்பட்டது. அந்த நேரத்தில், பெரும்பாலான நகரவாசிகள் சீன இனத்தவர்களாக இருந்தனர். உள்ளாட்சித் தேர்தல்களை மீட்டெடுப்பது 2008 இல் டிஏபியின் தேர்தல் அறிக்கையின் ஒரு பகுதியாக இருந்தது. இருப்பினும், டிஏபி தலைமையிலான பினாங்கு அரசாங்கம் இந்த வாக்குறுதியை நிறைவேற்றுவதில் சிக்கல்களை எதிர்கொள்கிறது.

அப்போது, உள்ளாட்சித் தேர்தலைத் தடுக்கும் அவசரச் சட்டம் உள்ளிட்ட பல சட்டங்களைத் திருத்துவதற்கு மத்திய அரசின் ஆதரவு தனது கட்சிக்குத் தேவை என்று அதன் பொதுச் செயலாளர் லிம் குவான் எங் கூறினார்.

2014 ஆம் ஆண்டு பக்காத்தான் ராக்யாட் அறிக்கையில் உள்ளாட்சித் தேர்தல் சேர்க்கப்படவில்லை, அப்போதைய பாஸ் தலைவர் அப்துல் ஹாடி அவாங் இது மற்றொரு மே 13 இனக் கலவரத்திற்கு வழிவகுக்கும் என்று கூறினார்.

2018 ஆம் ஆண்டில், கஏ அரசாங்கத்தின் மத்திய மந்திரி காலித் சமட், சிலாங்கூர் தலைநகர் ஷா ஆலம், உள்ளாட்சித் தேர்தலை மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கான அடிப்படையாக இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தார்.

கஏ அல்லது அன்வார் இப்ராஹிமின் நிர்வாகத்தின் ஒரு பகுதியாக இருக்கும் கூட்டணி, உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை மீட்பதாக அவர்களின் எஉ15 அறிக்கையில் உறுதியளிக்கவில்லை.

இருப்பினும், கஏ கோலாலம்பூர் நகர மண்டபத்தில் ஜனநாயக பிரதிநிதித்துவத்தை அனுமதிப்பதாக உறுதியளித்தது, இருப்பினும் நேரடி தேர்தல்கள்மூலம் அல்ல.

ஹரப்பான் தேர்தலில் வெற்றி பெற்றால் இந்த வழிமுறை மேலும் விவாதிக்கப்படும் என்று கூட்டணி கூறியது.

# கல்வி அடைவு நிலையில் பெண்களின் சாதனை ஆண்களின் சாதனையை விட மிஞ்சியுள்ளது

மலேசிய பாலின இடைவெளி குறியீட்டின் (Malaysia Gender Gap Index) கல்வி அடைவு துணை குறியீட்டில் பெண்களின் சாதனை 1.060 மதிப்பெண்களுடன் ஆண்களின் சாதனையை விஞ்சியுள்ளது.

மலேசிய புள்ளியியல் துறை (DOSM) ஒரு அறிக்கையில், ஆரம்ப மற்றும் இடைநிலை அளவுகளில் பெண்களுக்கான மொத்த சேர்க்கை விகிதங்கள் ஆண்களைவிட 98.4% மற்றும் 94.5% என்று முறையே 98.1% மற்றும் 90.6% ஒப்பிடும்போது அதிகமாக உள்ளன.

தலைமை புள்ளிவிவர நிபுணர் முகமட் உசிர் மஹிடின் Yayasan Tuanku Fauziah (YTF) இணையத் தளத்துடன் இணைந்து வெளியிடப்பட்ட அறிக்கையில், சிறந்ததைத் தேடும் பெண்கள்மூன்றாம் நிலை அளவில், பெண்களுக்கான மொத்த



சேர்க்கை விகிதம் 46.9% இருந்தது, இது ஆண்களின் 33.3% விட இன்னும் அதிகம்.

இருப்பினும், பெண்களுக்கான தொழிலாளர் சக்தி பங்கேற்பு விகிதம் இன்னும் குறைவாக உள்ளது, இது 12 வது மலேசிய திட்டத்தின் (12MP) அடிப்படையில் 2025 ஆம் ஆண்டில் 59% இலக்கோடு ஒப்பிடும்போது 55.5% உள்ளது என்று அவர் கூறினார்.

இதற்கிடையில், 2021 ஆம் ஆண்டில் பொருளாதாரப் பங்கேற்பைப் பொறுத்தவரை, பெண்கள் சேவைத் துறையில் %6.6%, உற்பத்தித் துறையில் 15.1% பதிவு செய்துள்ளனர். அவர்களில் ஒரு சிறிய எண்ணிக்கையினர் மட்டுமே சுரங்கம் மற்றும் குவாரி துறையில் வேலை செய்கிறார்கள். சராசரி மாதச் சம்பளம் மற்றும் பெண்கள் பெறும் ஊதியத்தின் அடிப்படையில், 2020 இல் ரிம2,899 லிருந்து 2021 இல் ரிம2,968 ஆக அதிகரித்துள்ளது, என்று அந்த அறிக்கை கூறுகிறது.

சமூக அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவமும் மிகக் குறைந்த மதிப்பெண்ணான 0.100 உடன் சவாலுக்கு உட்படுத்தப்பட்டது, எனவே அமைச்சர்கள் மற்றும் எம்.பி.க்களின் பதவிகளை வகிப்பதில் பெண்கள் இன்னும் ஆண்களை விடப் பின்தங்கியுள்ளனர் என்பதை நிரூபிக்கிறது.



# புதுவருடத்தை டிரைஃபில் ஓடு வரவேற்போம்




**கிறிஸ்துமஸ்** முடிந்த இரண்டாவது நாளிலிருந்தே புத்தாண்டு கொண்டாட்டம் ஆரம்பமாகி விடும் இப்போது தான் புது வருடம் ஆரம்பிச்ச மாதிரி இருக்க அதுக்குள்ள இன்னொரு புது வருடம் பிறக்கப் போகிறது. பொதுவாகவே எல்லோரும் புது வருடம் பிறக்கப் போகிறது என்பதுடன் அதோடு சில மாற்றங்களையும் எதிர் பார்ப்பது வழக்கம் தான். நான் இன்றிலிருந்து

இதை செய்வேன், அதை செய்ய மாட்டேன் இந்த மாதிரி செய்பவர்களில் 98% பேர்கள் அதில் வெற்றி காணுவதில்லை காரணம் பழக்க வழக்கம் உடனே ஒரு புதிய வருடத்திற்காக மாறி விடுவது இல்லையே? மாற்றம் வேண்டுமானால் அதை இன்று கூட ஆரம்பித்து உடனடியாக கடைப்பிடிக்கலாம்.

**புத்தாண்டே வருகவே**
**புது வாழ்வு மலர்கவே**

இந்த வருடத்தில் சில விசயங்கள் ஏன் இப்படி? என்றிருந்தது. வருகின்ற புது வருடத்தில்



நமக்கும் பிரச்சனைகள் வரக் கூடாது, நம்மால் பிறருக்கும் எதுவும் வராமல் பார்த்துக் கொண்டு வருடத்தை இனிதாக கழிப்போம்.

**புத்தாண்டே**

உனை விட எமக்கு தெம்பு இருக்கிறது, இருந்தாலும் உன் வரவு நல்வரவாகட்டும். இந்த புது வருடம் அனைவருக்கும் இனிமையான ஒன்றாக அமையட்டும் அல்லது நாமே அமைத்திடுவோம். எல்லாம் எம்மிடம் தான் இருக்கிறது. எல்லோருக்கும் என் இனிய புத்தாண்டு வாழ்த்துகள்.

**✸மத்தாப்பு சிதறல்களாய் வந்த முத்தாய்ப்பான கருத்துகள்✸**

பண்டிகை என்றாலே குஷி, உறவுகள்




சேர்ந்தாலே குதூகலம். முன்னைய காலங்களில் உறவுகள் ஒன்றோடொன்று சந்தோசமாகவும், அன்பாகவும், ஒற்றுமையுடனும் இருந்தார்கள். அங்கு மகிழ்ச்சி, அன்பு, ஆனந்தம் என பெருக்கெடுத்து ஓடும். பின்பு போகப் போக அவை அனைத்தும் குறைந்து போய் உறவுகள் குறைந்து நண்பர்கள், அயலவர்கள் தான் அவசரத்துக்கு உதவும் துணையாக மாறி விட்டனர். இன்றைய நவீன காலத்தில் குடும்பம் மொத்தமாக கொண்டாடிய பண்டிகைகள் தற்போது நேரம், காலம், சூழ்நிலைக்கு தக்கவாறு தனித் தனியாக கொண்டாடும் நிலை ஏற்பட்டு்ள்ளது. சிறு சிறு விடயங்களுக்காக உறவுகள் சண்டை போட்டு விலகுவது இன்று சகஜமாகி விட்டது அத்துடன் ஒருவருக்கொருவர் பொறாமைப் படுவதும் அதிகமாகி விட்டது. உறவுகளுக்குள் விட்டுக் கொடுப்பு மிகவும் அவசியம். உறவுகள் பலர் கூடி சுற்றுலா ஒன்றுக்கு சென்று வந்தால் உறவு மேம்படுவதோடு மனக் கசப்புகள் இருந்தாலும் அவை நீங்கி உறவு வலுப்படும் . உறவுகள் ஒன்று கூடி உணவகங்களில் விருந்து உண்பது போன்ற விடயங்களில் ஈடுபடும் போது ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி இன்ப, துன்பங்களில் கலந்து கொள்ளும் போதும் மகிழ்ச்சி உண்டாகிறது. நமது சொந்தங்கள் விட்டுப் போகாமலும் தொடரும். உண்மையில் பண்டிகைகளை குடும்ப உறவுகளுடன் சேர்ந்து கொண்டாடுவது தான் சிறப்பு எனவே பண்டிகை நாட்களில் குடும்ப உறவுகளுடன் மகிழ்சியாக செலவிடுவோம்.






## சொந்தங்கள் கூடும் பொழுதில் செய்து சுவைத்திட டிரைஃபில்

### தேவையானவை

1 ஸ்விஸ் ரோல் கேக் - 1
2 உடனடி கஸ்டட் - 1 லீற்றர்
3 பழக்கலவை - 400 கிராம்
4 சிவப்பு நிற ஜெல்லி - 1பக்கெட்
5 பச்சை நிற ஜெல்லி - 1பக்கெட்
6 பொடித்த நட்ஸ் கலவை - 5 மே.க
7 விப் கீரீம் - 1 போத்தல்

### செய்முறை

இரண்டு ஜெலிப் பெட்டிகளையும் உடைத்து தனித் தனியாக கலந்து செட் செய்யவும். ஒரு குழிவான கண்ணாடி குவளையொன்றில் ஸ்விஸ் ரோல் கேக் துண்டுகளை வட்டங்களாக வெட்டி எல்லாப் பக்கமாக பார்த்தாலும் தெரியும் படி அடுக்கவும். குழிவாக இருக்கும் நடுப் பகுதியில் கஸ்டாட் கலவை மற்றும் விப் கீரீமின் ஒருபகுதியை விட்டு ஒரு பங்கு பழக் கலவை மற்றும் ஜெலி துண்டுகளை பரத்தி மீண்டும் கஸ்டாட் மற்றும் விப் கீரீம் பிறகு பழக் கலவை மற்றும் ஜெலி துணடுகள் இப்படி மாறி மாறி லெயர் போல அடுக்கி நிறைவாக விப் கீரீமை நிரப்பி பொடித்த நட்ஸ் கலவையை தூவி குளிர் சாதன பெட்டியில் வைத்திருந்து ஜில் என்று பரிமாறவும்.




# புதுவருடத்தில் புதிதாய் பிறப்போம்!

வழக்காறு



**ஒவ்வொரு** புத்தாண்டின் போதும் எம்மில் பலருக்கும் பல உறுதிமொழிகளை ஏற்கும் பழக்கம் உள்ளது. சிலர் அவற்றை சிரத்தையுடன் சில மாதங்கள் முயற்சித்து விட்டு கைவிட்டு விடுவதும் வாடிக்கைதான். ஆனால் மனதில் உறுதி இருந்தால் நிச்சயமாக எமது இலக்கினை அடைய முடியும். இதற்கு நாம் சில விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

அந்த வகையில் முதலில் நாம் நேரத்தை சிறந்த முறையில் கையாளத் தெரிந்து கொள்ள வேண்டும். நேரத்தை நேசிக்க வேண்டும்.

ஒவ்வொரு நாளும் எதற்காக எவ்வளவு நேரம் செலவிடுகிறோம் என்று நம்மை நாமே நிதானித்து அறிய வேண்டும்.

அதில் குறிக்கோளை அடைய என்ன செய்தோம்அதற்கென்று எவ்வளவு நேரத்தை பயனுள்ளதாக்கினோம் .. என்று சிந்தையை தினமும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எதிலெல்லாம் தேவையில்லாமல் நேரத்தை விரயம் செய்கிறோம் என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும். இதனை அறிந்து வைத்தால் தேவையில்லாத செயல்களிலிருந்து நம்மை விடுவித்து கொள்ள உதவும்.

காலம் கடத்தல், சோம்பல், மறதி, நீண்டதூக்கம் ஆகிய நான்கும் வாழ்க்கையில் அழிந்து போகிறவனின் அணிகலன்கள் என்கிறார் திருவள்ளுவர்.

திருவள்ளுவர் சொன்ன இந்த நான்கு விஷயங்களும் நேரத்தைத் திருடிக் கொள்கின்றன என்பதையும் நாம் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அடுத்ததாக நாம் எமது குறிக்கோளை நிர்ணயித்தல் வேண்டும். ஒரு குறிக்கோளை முடிவு செய்த பின்னர், அதனை நிறைவேற்றுவதனால் ஏற்படக்கூடிய நன்மை, தீமைகளை ஆராய வேண்டும். அப்படி சீர்தூக்கிப் பார்க்கும்போது அந்தக் குறிக்கோளை நிறைவேற்ற விடாமல் தடுக்கும் குறுக்கீடுகள் என்னென்ன, அவற்றை அகற்றுவது எப்படி என்றெல்லாம் ஆராய வேண்டியதிருக்கும். உங்கள் குறிக்கோள் எதுவென்று ஒருதாளில் எழுதிக் கொள்ளுங்கள், அது எவ்வளவு காலவரையறைக்குள் நீங்கள் அடைய வேண்டும் என்பதையும் அதே தாளில் குறித்துக் கொள்ளுங்கள். நாள், கிழமை மாதம், ஆண்டு – உட்பட திட்டவட்டமான காலவரையை எழுதி வைத்துக் கொள்ளுங்கள்.




மேலும், குறிக்கோளை நிறைவேற்ற முயலும் வேளையில் தடைகள் வருவதற்கு வாய்ப்புள்ளதா என ஆராய்ந்து, தடைகளை நீக்கும் வழிகளையும் யோசித்துத் தாளில் குறித்துவைத்துக் கொள்ள வேண்டும் ஆராய்ந்தபின் செயல்பட வேண்டும்.

செயலைத் தொடங்கிவிட்டு ஆராயக்கூடாது. ஆராயும்போது அரைகுறையாக ஆராயக்கூடாது செயலுக்குரிய எல்லாவற்றையும் முழுமையாக ஆராயவேண்டும்.

ஒரு காரியத்தை ஆராய்ந்து செய்யும் முறை பற்றி எடுத்துரைக்கும்போது வள்ளுவர் சொல்கிறார், செயலுக்குரிய அறிவுடையவர்களோடு ஆராய்ந்து, சிந்தித்து செயலைச் செய்பவருக்கு முடியாதது எதுவும் இல்லை!’என்று.



> **ஒரு குறிக்கோளை அடையத் திட்டமிட்டு வைத்துக்கொண்டால், அடுத்து அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரியவரும். திட்டத்தை நிறைவேற்ற எவையெல்லாம் தடைக்கற்களாக வரலாம், அவற்றை எப்படியெல்லாம் தகர்த்து முன்னேறிச் செல்லலாம் என்ற வியங்களும் திட்டமிடலின் போது தெரியவரும்**

இவற்றை விட குறிக்கோள்களை அடைவதற்கு சிறந்த திட்டமிடல்கள் மிகவும் அவசியமானவை. சரியான திட்டம் உங்களிடம் இருப்பின் எந்தச் செயலை எப்போது செய்ய வேண்டும் என்ற தெளிவு உங்களுக்கு ஏற்படும்.

செய்யவேண்டிய வேலைகளை வரிசைப்படுத்தி , அதில் எது முக்கியத்துவம் வாயந்தவை






சந்திரசேகரம்
சாரிஷா

என்று தேர்வு செய்து ஒன்றன்பின் ஒன்றாய் நிறைவேற்றுதல் வேண்டும்.

அவற்றை ஒவ்வொன்றாகச் செய்து முடிக்கும் காலத்தையும் நிர்ணயித்து, எந்தக் கோணத்தில்



பார்த்தாலும் இதுவே சிறப்பான திட்டம் என்று கூறும் வகையில் திட்டம் அமைத்துக் கொள்ள வேண்டும். திட்டமிடல் சரியில்லா விட்டால் உங்களது உழைப்பும், நேரமும் விரயமாகிவிடும்.

திட்டமிடும்போது நேரம் செலவாகலாம் அதைப்பற்றிக் கவலைப்படக் கூடாது

ஒரு வீடு கட்டும் முன் ஒரு கட்டிடப் பொறியாளர், மாதிரி வரைபடம் தயாரித்துக் கொள்கிறார். அதிலே படுக்கை அறை, சமையலறை, குளியலறை, பூஜை அறை என்று பல கூறுகளும் இடம்பெற்றிருக்கும்தானே?

அவ்வாறே, ஒரு குறிக்கோளை அடையத் திட்டமிட்டு வைத்துக்கொண்டால், அடுத்து அடுத்து என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவாகத் தெரியவரும். திட்டத்தை நிறைவேற்ற எவையெல்லாம் தடைக்கற்களாக வரலாம், அவற்றை எப்படியெல்லாம் தகர்த்து முன்னேறிச் செல்லலாம் என்ற விஷயங்களும் திட்டமிடலின் போது தெரியவரும்.

திட்டமிடுவது என்பது ஒரு செயலைச் செய்து முடிக்கத் தேவைப் படும் குறிக்கோளை நிர்ணயித்து, வழிமுறைகளை வகுத்துக் கொள்வதே, இதனையே திருவள்ளுவர், ‘எண்ணித் துணிக கருமம்!.. என்றார்.

மேலும் பணிகளைப் பட்டியலிடுதல் என்பது மிகவும் முக்கியமானது. அதாவது கால அட்டவணையை உருவாக்கிக்கொண்டு அன்றாடப் பணிகள், அந்த மாதத்தில் முடிக்க வேண்டிய வேலைகள், அந்த ஆண்டின் முக்கிய வேலைகள் ஆகியவற்றுக்கான நேரத்தை ஒதுக்கி, அதன்படி செயல்படும் மனஉறுதியுடன் இருங்கள்.

எதையும் ஒத்திப்போடாமல், கவனமாக ஒரு குறிக்கோளை உருவாக்கிக்கொண்டு, உணர்ச்சிவசப்படாமல் இடையறாது முயற்சி மேற்கொண்டு உங்கள் பணிகளைச் செய்து வாருங்கள்.

இவற்றை விட குறிக்கோளை நிறைவேற்ற பலரது ஆதரவு உங்களுக்குத் தேவைப்படும். அவர்கள் யார், எவர் என முடிவு செய்து, யார் யார் மூலம் எந்தமாதிரி உதவிகளைப் பெறலாம் என்பதையும் அந்தத் தாளில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள்.

ஆகவே, செயலை நிறைவேற்றத்தக்க வழிமுறைகளை நாட வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் பலரது உதவி இருந்தாலும் முயற்சியில் தோல்வி வரும் என்று வள்ளுவர் சுட்டிக்காட்டுகிறார்.

நீங்கள் தேர்ந்தெடுக்கும் குறிக்கோளில் யாருடைய ஆதரவு இல்லையெனினும் தீவிர முயற்சிக்கான பலன் வெற்றி தங்களை வந்து சேரும் .

இவற்றிற்கு மேலாக, ஒரே நேரத்தில் அதை இதையென்று எல்லாவற்றையும் முடித்துவிட வேண்டும் என்ற எண்ணம் இல்லாமல் பொறுமையாயும்,நிதானமாயும் ஒரே வேலையை குறிக்கோளாக வைத்தால் உங்களது நேரத்திற்கு பலன் கிடைக்கும்

ஆகவே ஒரு நேரத்தில் ஒரு பணியில் மட்டும் கவனம் செலுத்துதல்.

ஒரு வேலையைச் செய்து கொண்டிருக்கும போதே இன்னொன்றை தேர்வு செய்தால் கவனச்சிதறல் ஏற்படும் .. குறித்த முன் வேலையை சரியான நேரத்திறகு முடிக்க முடியாமல் போகலாம். நமது திட்டத்தின் சிறப்பு மற்றும் செயல்படுத்தும் பாங்கு,நேர மேலாண்மை ஆகியவற்றை பொறுத்துக் குறிக்கோள் வெற்றி அடைவதும் தோல்வி அடைவதும் அமையும்.

மேலும், தேவையற்ற செலவை குறைத்து, சேமிப்பை வழக்கமாக்கி கொள்ளுங்கள். நம் அன்றாட வாழ்க்கைக்கு தேவைப்படும் பொருட்களுக்கு மட்டுமே பணத்தை தாராளமாக செலவு செய்வது, அத்தியாவசியமில்லாத பொருட்கள் வாங்க காசை வாரி இறைக்க போவதில்லை என்ற சபதத்தை நாம் செயல்படுத்துவதல் வேண்டும்.

ஆகவே, சேமிப்பின் அவசியத்தை உணர்ந்து செயல்பட்டு, எமது பொன்னான நேரத்தை வீணடிக்காமல், இலக்குகளை அடைய சிறந்த திட்டமிடல்களையும் மேற்கொண்டு, புத்தாண்டில் வாழ்வை வளமாக்கி கொள்ள எடுத்த சபதங்களை இனிதே நிறைவேற்ற உறுதி ஏற்போம்.








# புதுவருடத்தில் உலகப்பொருளாதாரம் எதிர்கொள்ளும் சவால்கள்

**உலக** நாடுகள் அனைத்தினதும் அபிவிருத்தி நிலையை தீர்மானிப்பதில் பொருளாதாரமானது எந்தளவிற்கு செல்வாக்கு செலுத்துகின்றதோ,அது போலவே ஒவ்வொரு நாடும் தன்னிலே சுயமாக தங்கியிருந்து தனது பொருளாதார நிலையை தீர்மானித்துவிட முடியாது. மாறாக அனைத்து அரசுகளுமே ஒவ்வொரு நாடுகளில் தங்கியிருந்து ஒருங்கிணைந்த ரீதியிலே பொருளாதாரத்தையோ,அபிவிருத்தியையோ தீர்மானிக்க வேண்டும். அதனடிப்படையில் பிறக்கவிருக்கும் புதுவருடத்தில் உலகப்பொருளாதாரத்தின் நிலை பற்றியும்,அது எவ்வகையிலான சவால்களை எதிர்கொள்ளவுள்ளது என்பது பற்றியும் அறிந்துகொள்வது சாலச்சிறந்ததாகும்.



கொரோனாத் தொற்றினால் சகல துறையிலும் பொருளாதார நிலையானது மோசமடைந்து, குறிப்பாக உணவு நெருக்கடியால் எத்தனையோ மில்லியன் மக்கள் பாதிப்படைந்திருந்த நிலையில் அதிலிருந்து படிப்படியாக மீண்டுவர முன்னரே உக்ரைன், ரஷ்யா இடையேயான போர் பதற்ற நிலையானது இராணுவச்செலவுடன் பணவீக்க சுழற்சியையும் அதிகப்படுத்தி மீண்டும் சர்வதேச ரீதியில் உணவுப்பற்றாக்குறை, எரிபொருள் விலை உயர்வு, பணவீக்கம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சனைகளை ஒன்றன்பின் ஒன்றாக தந்த வண்ணம் உள்ளது. தொடர்ச்சியாக இரண்டு காலாண்டிற்கு பொருளாதார சரிவின் இந்த நிலை தொடரலாம் எனவும் கூறப்படும் நிலையில், சர்வதேச நாணய நிதியமானது அண்மையில் வெளியிட்ட அறிக்கையில், ‘ 2023 இல் உலகளாவிய வளர்ச்சி வெறும் 2.77 மட்டுமே இருக்குமென்று கூறப்பட்டமை பொருளாதார மந்தநிலையானது எந்தளவிற்கு ஆழமடைந்து வருகிறது என்பதை தெளிவுபடுத்துகிறது.அதே நேரம் சர்வதேச நாணய நிதிய நிர்வாக இயக்குனர் கிறிஸ்டலினா ஜியார்ஜிவா அவர்கள் கடந்த நவம்பர் மாதத்தில் வழங்கிய உரையில், ‘மீண்டு வருவதற்கான கடந்தாண்டு நம்பிக்கையின் அறிகுறிகள் கொவிட் காரணமாகவும்,உக்ரைன் போர் மற்றும் எல்லா கண்டங்களிலும் நிலவும் காலநிலை மாற்ற பேரழிவுகளாலும் உலகப்பொருளாதாரத்தில் ஓர் எதிர்பாராத வளர்ச்சி குறைவாக மாறிவிட்டன.’ என்றும் அத்தோடு,‘இந்த இருண்ட காட்சியைப் பார்க்கையில் நாம் ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக இருக்கவேண்டிய இந்த மிக முக்கிய வேளையில் அதிகரித்த பிளவுகளை நோக்கிய போக்கு இன்னும் அதிகமாக கவலைப்படுத்துகிறது. இதன் விளைவாக மிகவும் வறிய மற்றும் பாதுகாப்பற்ற ஓர் உலகை நோக்கி நாம் தூக்கத்தில் நடப்பதை போல சென்று கொண்டிருக்கிறோம். என்று எனக்கு கவலையாக உள்ளது.’ என்றவாறாக கருத்து தெரிவித்திருந்தார்.


புஸ்பராசா
கோபிகா

அமெரிக்கா, சீனா, ஜப்பான், ஜேர்மனி, இந்தியா, பிரிட்டன்,பிரான்ஸ்,இத்தாலி,பிரேசில்,கனடா போன்ற உலகின் பெரும் பொருளாதார நாடுகள் கூட பொருளாதாரத்தில் மந்த நிலையையே எதிர்கொண்டு வருகின்றன. பங்குச்சந்தைகளின் நுகர்வு மேலாண்மை குறியீடுகளும், புதிய கொள்முதல் கோரிக்கைகளுக்கான உலகளாவிய குறியீடுகளும் பெருந்தொற்று தொடங்கி, அதாவது 2020 இன் தொடக்கத்திலிருந்தே குறைந்த மட்டத்திலான சரிவை நோக்கி பயணித்துவரும் நிலையில் அதன் வளர்ச்சியடையா தன்மையை இவ்வருட நிலவரம் மூலம் அறியலாம். அதாவது 2022ஆம் ஆண்டுக்கான உத்தியோகபூர்வ வளர்ச்சி விகிதம் வெறும் 5.5% ஆக உள்ளது. இது 1990 களின் முற்பகுதியில் இருந்ததை விட மிக குறைவாகும். ஆனாலும் பொருளாதாரம் இந்த வருடத்தின் முதல் ஒன்பது மாதத்திற்கும் 30% ஆண்டு விகிதத்தில் மட்டுமே விரிவடைவதால் அது இனி வரும் காலங்களில் அதாவது 2023 இல் இன்னும் குறைவடையக்கூடும் எனவும் கணிக்கப்படுகிறது.



இந்த நிலை தொடர்வதில்  பல்வேறு காரணிகள் ஆதிக்கம் செலுத்தி வந்தாலும் கூட அமெரிக்காவின் வர்த்தகப்போர் நடவடிக்கைகள், சீனாவுக்கான மின்னணு நுண்தகடுகள் ஏற்றுமதி மீதான தடைகள் போன்றன 2023க்கான வளர்ச்சி விகிதத்தை கால் சதவீதப்புள்ளியாக குறைக்கும் எனவும் எதிர்வுகூறப்படுகிறது.  உலகளாவிய உணவுப்பொருட்களின் விலைகள் கடந்த ஏப்ரல் மாதமளவில் இருந்ததை விட குறைவடைந்திருந்தாலும் கூட உணவு விலை, பணவீக்கம் குறைந்த மற்றும் நடுத்தர வருமான நாடுகளிலும் மற்றும் அதிக வருமான நாடுகளிலும் ஏறக்குறைய தொடர்ந்தும் அதிகமாகவே உள்ளது.’ என உலகவங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. அமெரிக்க டொலருக்கான நாணய மதிப்பு குறைந்தமையால் எரிபொருள் எண்ணெய் இறக்குமதி செய்யும் ஏழை நாடுகளில் கிட்டத்தட்ட 60% நாடுகள் இந்த ஆண்டிலே உள்நாட்டு எண்ணெய் விலை அதிகரிப்பை கண்டன. அது தவிர வட்டி விகிதங்களின் அதிகரிப்பும் மற்றும் டொலர் அடிப்படையில் திரும்ப செலுத்த வேண்டிய கடன்களின் அதிகரிப்பும் ஏற்கனவே இலங்கை போன்ற நாடுகளை பாரிய நெருக்கடிக்கு உள்ளாக்கிய நிலையில்  தொடர்ந்தும் இது சர்வதேச ரீதியிலும் தாக்கத்தை செலுத்திய வண்ணமே உள்ளன.


இதனை அண்மையில் பாலிலஉச்சி மாநாடு முன்வைத்த அறிக்கையில்  ‘அமெரிக்க டொலர் வலுவடைவது வளரும் பொருளாதாரங்களின் கடன்சுமைகளை மோசமாக்கி வருகிறது. இது நாடுகள் கடன் செலுத்தவியலாத நிலையை காட்டுத்தீ போல உலக நிதி அமைப்பு முறைக்குள் பரப்பும் வாய்ப்பு அதிகம்.’  என தெரிவிக்கப்பட்டமை அதன் உண்மைத்தன்மையை உணர்த்துகிறது.



அந்தவகையில் ஆரம்ப காலங்களுடன் ஒப்பிடுகையில் உலகப்பொருளாதாரமானது மிகவும் மோசமானதொரு நிலையிலே தொடர்ச்சியாக உள்ளமையால் அந்த நிலை மாறி பழைய நிலைக்கு அனைத்து துறைசார் வளர்ச்சியும் ஏற்பட சில ஆண்டுகள் தேவை என்பது தெளிவாகின்றது. எனவே மலரவிருக்கும் புத்தாண்டிலும் உலகப்பொருளாதாரமானது பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் என்பது  எந்தளவிற்கு உறுதிபட கூறமுடியுமோ,அதேயளவிற்கு இந்த நிலையை ஓரளவேனும்  குறைப்பதற்கு நாடுகளுக்கிடையே ஒருங்கிணைந்த தன்மையும் அவசியம் என்பதும் புலனாகிறது. நாடுகளுக்கிடையில் காணப்படும் சுமுகமான உறவுகள்  ஒரு நாட்டை மிக மோசமான நிலைக்குசெல்லவிடாது  மற்றைய நாடு காத்து நிற்கும்  என்ற ரீதியிலாவது முக்கியம்பெற்று விளங்குகிறது.  எனவே இந்த இடர்நிலையை எதிர்கொள்ள உலகநாடுகள் ஒன்றிணைந்து செயற்படுவது மிக அவசியமானதொன்றாகும்.





# புதுவருடத்தில் காலடி வைக்கும் இலங்கையின் சிவில் சமூகம்




**ஜனநாயக** சமூகம் ஒன்றை உருவாக்குவதிலும் உறுதி செய்வதிலும் சிவில் சமூகத்தின் பங்கு மிக அளப்பரியது.

சிவில் சமூகம் என்பது அரசு சார்பில்லாத சமூக விவகாரங்களை குறித்து சிந்தனைகள், செயல்பாடுகள் அனைத்தையும் குறிக்கின்றது. சிவில் சமூகம் என்ற சொல்லாடலானது அரிஸ்டோட்டில், பிளேட்டோ காலத்தை பழமையான ஒன்றாகும். இருந்தபோதிலும் 1950 களுக்கு பிந்திய காலத்திலேயே அதிக அளவு முக்கியத்துவம் படுத்தப்பட்டது. கம்யூனிசத்திற்கும், முதலாளித்துத்திற்கும் இடையில் பனிப்போரில் சிவில் சமூகத்தின் பங்கேற்பு மிகவும் முக்கியமாக காணப்பட்டது.

விரிந்த பார்வையில் சிவில் சமூகம் என்பது சமூகப் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான அமைப்புகளையும் யுத்த எதிர்ப்பு ,சாதிய எதிர்ப்பு ,பெண் விடுதலை ,மற்றும் இன உரிமை போன்றுவற்றுக்கான அமைப்புகளையும், தேசிய நீரோட்டத்திற்குள் அடங்காத மாற்று அமைப்புகளையும், சிவில் சமூகம் என கூறலாம். இந்த அமைப்புகள் பலமாக இருக்கின்ற போது எந்த சூழ்நிலையிலும், மக்களின் மனித உரிமைகளையும், ஜனநாயக உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இலங்கையில் சிவில் சமூகம் என்பது சுதந்திரத்திற்கு பிந்திய காலம் தொட்டே நடைமுறையில் இருந்தாலும், 1980 களின் பின்னரே அதீத முக்கியத்துவப்படுத்தி நோக்கப்பட்டது. சிவில் சமூகம் பற்றிய கருத்தாடல் அண்மைக்காலமாக மிகுந்த பிரபல்யம் பெற்று வருகிறது. அதிலும் குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகளில் சிவில் சமூக செயற்பாடுகளில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

சிவில் சமூகத்தின் பண்புகள் என நோக்கும் போது மக்களது பொது நலனுக்காக கூட்டாக இணைந்து செயல்படுவார்கள், சிவில் சமூகத்தில் இணைந்து கொண்ட ஒவ்வொரு உறுப்பினரும் தன்னாதிக்க நிலையை விடுத்து பிறர் மீது அதிகாரத்தை பிரயோகிக்காது தன்னார்வ





சுப்பிரமணியம்
கலைச்செல்வி

நிலையில் தொழிற்படுவார்கள், இவர்களுக்கென தனியான ஒரு அடையாளமும் காணப்படும், ஆள்புலத்தை தெளிவாக வரையறுக்காமல் நாடு முழுவதும் செயற்படுவார்கள், போன்ற பண்புகளை அவதானிக்க முடியும்.

இலங்கையில் அரசுக்கும் அரசாங்கத்துக்கும் இருக்கின்ற பொறுப்புகளை உணர்த்துவதற்கும், அந்த பொறுப்புகளை பற்றிய பொதுசன விழிப்புணர்வை உருவாக்குவதற்கும், சிவில் சமூகத்தின் பங்களிப்பு இன்றியமையாததாகும். அந்த பொறுப்புக்களை அரசாங்கம் சரியாக செய்யாதபோது அவற்றை சுட்டிக்காட்டி தட்டி கேட்பதற்கும் போராட்டங்களை உருவாக்குவதற்கும் சிவில் சமூகம் முன் வரவேண்டும். அரசாங்கத்துக்கு எதிர்நிலையில் இருக்கும் அரசியல் கட்சிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் போன்றவை அடக்குமுறைகளுக்கு உட்பட்டால், அல்லது அவை செயல் அற்றவையாக இருந்தால், அந்த இடத்தில் மாற்றுக் குரலாக ஒழிப்பவை சிவில் சமூக அமைப்புகள் ஆகும். அப்படியான சந்தர்ப்பத்தில் சிவில் சமூகத்துக்கே கூடிய பொறுப்புண்டு கூடவே அரசாங்கத்துக்கு எதிர்நிலையில் இருக்கும் புற சக்திகளை நிதா



னப்படுத்துவதற்கான அழுத்தங்களையும் சிவில் சமூகமே வழங்க முடியும்.

இன்று இலங்கையில் சிங்கள சமூகத்திலும், தமிழ் சமூகத்திலும், மலையக சமூகத்திலும், ஏராளமான சிவில் சார்ந்த அல்லது சிவில் அடையாளமுடைய அமைப்புகள் உள்ளன. இவை பல இடங்களிலும் சிறிய சிறிய நிகழ்ச்சிகளை நடாத்தி வருகின்றன. ஆனால் இன்னும் பரந்த அளவில் ஒரு கருத்து நிலையோ, இந்த செயற்பாடுகள் பற்றிய அறிமுகத்தையோ, மாற்றத்துக்கான எழுச்சியையோ, உருவாக்கவில்லை. இன்று இலங்கையில் மனித உரிமைகள் அமைப்பு ,பெண்களை பாதுகாப்பதற்கான அமைப்பு, சிறுவர்களை பாதுகாப்பதற்கான அமைப்பு , இனரீதியாகவும் ஒவ்வொரு மதம் சார்ந்த நலன்களை பேணவும் அதிக அளவு சிவில் சமூகங்கள் செயற்பட்டு வருகின்றன. இவ் அமைப்புகளில் பெரும்பாலானவற்றில் அரசியல் கட்சிகள் சார்ந்த உறுப்பினர்களே இருக்கிறார்கள். எப்படி தாம் சார்ந்த அரசியலுக்கு அப்பால் நகர்ந்து சிவில் என்ற பொதுத்தளத்தில் அதற்கான உணர்வோட்டத்தோடு இயங்க முடியும். இதுபோலவே சாதி மதம், பிரதேசம் ,இனம் என்ற வேறுபாட்டு உணர்வு உள்ளவர்கள் பலரும்  இந்த அமைப்புகளில் இயங்கி வருகின்றனர். இப்படியான எண்ணங்களோடு செயல்படுவதால் எப்படி மாற்றங்களை குறித்து புதிய ஒரு சமூகத்தை உருவாக்க முடியும்?

என்பது கேள்விக்குறியான விடயமாகும்.

மெய்யான சிவில் அமைப்புகள் மக்களின் நலனை குறித்து அதிகமாக சிந்திக்கும். அதற்காக தம்மை அர்ப்பணித்து உழைக்கும், மனப்பாங்கையும் உத்வேகத்தையும் கொண்டிருக்கும். சிவில் சமூகம் என்பதும் சிவில் அமைப்பு என்பதும் நேரடி அரசியல் சார்பில்லாத பொதுத்தன்மை உடையவை, மக்களிடமிருந்து தோன்றியது, மக்களுக்கு நெருக்கமானது, அரசியல் அபிலாசை அற்றது ,இதுவே அதனுடைய பலமாகும். இது எப்போதும் பக்கம் சாராது செயற்படும் பண்பே அதனை வலுவூட்டுகிறது.

இலங்கையில் சிவில் சமூகத்தின் வளமான செயல்பாட்டை இரு சந்தர்ப்பங்களில் அவதானிக்க கூடியதாக இருந்தது. முதலாவதாக 2018 ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நல்லாட்சி உருவாக்கப்படுவதற்கு பிரதான காரணியாக சிவில் சமூகத்தின் பங்களிப்பே காணப்பட்டது. தொடர்ந்து முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு எதிராகவும் அரசாங்கத்தின் ஜனநாயகத்துக்கு எதிரான செயற்பாட்டை வலுவிழக்கு செய்து, ஜனநாயகத்தை உறுதிப் படுத்தவும் மக்கள் செய்த அறக்களைப் போராட்டத்தில் மக்கள் இன ,மத, மொழி ,பால், வர்க்க வேறுபாடு இன்றி ஒரே தேசியமாக மக்கள் ஒன்றிணைந்து போராடி பாரிய ஆட்சி மாற்றத்தையும் ஏற்படுத்தி இருந்தனர். இதில் இலங்கை முழுவதும் சிவில் சமூகத்தின் பங்களிப்பை அவதானிக்க கூடியதாக இருந்தது. ஜனநாயகத்தை நிலை நிறுத்த தொடர்ந்து குரல் எழுப்பி கொண்டே இருந்தது சிவில் சமூகம்.

இப்போராட்டத்தை தொடர்ந்து இலங்கையில் வாழும் அனைத்து இனங்களும் ஒற்றுமையாக செயல்படுவதன் மூலம் உறுதியான விரைவான மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என்பதை உணர்ந்து கொண்டனர்.இவ் சாதாரண இன மக்களிடையே ஏனைய இனங்களை எம் மக்களாக பார்க்கும் ஒரு பண்பை அவதானிக்க முடிகிறது .இவ்வாறு சிவில் சமூகத்தோடு இணைந்து இலங்கையில் வாழும் அனைத்து மக்களும் தனது இன, மத, மொழி ,சாதி ,பால் வர்க்க ரீதியான வேறுபாட்டை விடுத்து ஒன்றாக செயல்பட்டால் நாடு இன்று காணப்படும் அரசியல் பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டும் அபிவிருத்தியை நோக்கி விரைவாக செல்வதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளது.






## நாங்களும் படைப்பாளிகளே !

# எமது நாற்றுக்கள் கிறிஸ்மஸ் மற்றும் புதுவருட கொண்டாட்டங்களில் திளைத்திருந்திருந்த தருணங்கள்





யோகித், நிந்துஜா, ஹரிஸ், தனுசிக், வினுசிக்கா, சாலினி, மிலர்சனா
(மணிக்கவத்தை)




அபி,அதாரா,வெண்பா
(லண்டன்)






ஜெ. ஜேசாந்
மண்டூர், மட்டக்களப்பு



டிவானி,நதிஷா,லக்ஷன்
பனாவத்தை, எட்டியாந்தோட்டை






R. காசினி
மண்டூர்- 03 மட்டக்களப்பு




ர.றஜின்பிரசாத்
(பிரான்ஸ்)



வ.விஸ்ணுயன், த.றிக்ஷிகா,ஜ.ஜஸ்வின்
(தையிட்டி)



# புத்தாண்டில் உங்கள் கனவுகள் மெய்ப்படட்டும்...



எனது பெயர் றஜின்பிரசாத். எனக்கு புதுவருடத்தில் அமெரிக்காவின் அருங்காட்சியகம் சென்று டைனோசரின் எலும்புக்கூடு பார்க்க ஆசை.



எனது பெயர் சுபாஷினி. நான் மணிக்காவத்தையில் வசிக்கிறேன். எனக்கு புதுவருடத்திற்கு கிளி வாங்கி வளர்க்க ஆசை.



நான் அபிஷாளினி. மணிக்காவத்தையில் வசிக்கிறேன். எனக்கு புதுவருடத்திற்கு நாய் வாங்கி வளர்க்க ஆசை







நான் யாழ்ப்பாணத்திலிருந்து தன்வி. எனக்கு புதுவருடத்திற்கு புத்தகப்பை வாங்க ஆசை.




எனது பெயர் லக்ஷார்த்தனி. நான் மணிக்காவத்தையில் வசிக்கிறேன்.எனக்கு புதுவருடத்தில் முயல் வாங்கி வளர்க்க வேண்டும் என்று விருப்பம்.



நான் மணிக்காவத்தையிலிருந்து பிரணிக்கா. எனக்கு பூனை வளர்க்க விருப்பம்.





எனது பெயர் கவிலக்ஷா, நான் மட்டக்களப்பில் வசிக்கிறேன். எனக்கு புதுவருடத்தில் துவிச்சக்கரவண்டி வாங்க வேண்டும் என்று ஆசை.




எனது பெயர் ஜெ.கிருஷனா. நான் யாழ்ப்பாணத்தில் வசிக்கிறேன். எனக்கு புதுவருடத்தில் துவிச்சக்கர வண்டி வாங்க ஆசை






நான் மட்டக்களப்பிலிருந்து ஆர்த்தி. எனக்கு நிறைய பறவைகள் வாங்கி வளர்க்க விருப்பம்.



நான் காங்கேசன்துறையிலிருந்து சபினஜா. எனக்கு கிளி வாங்கி வளர்க்க வேண்டும் என்று ஆசை.







# மிளகாய் பயிரால் வளமாகும் பொருளாதாரம்!

**மிளகாயானது** பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த பயிராகும். இது பிரதானமாக வறண்ட வலயத்திற் பயிரிடப்படுகின்றது. இப்பயிரின் பெறுமதிகள் காரத்தேவைகளுக்காக பயன்படுகிறது. இலங்கையில் தனிநபர் உலர் மிளகாய் நுகர்வு வருடத்திற்கு கிலோவில். 2.10 – 2.31 மற்றும் கணிசமான அளவு பச்சை மிளகாயாக நுகர்வுக்கும் சேர்க்கப்படுகிறது.

## தாவரத்தின் இயல்புகள்

மிளகாய் ஓராண்டுப்பயிராக சாகுபடி செய்யப்படுகின்றது. இச்செடி அதன் வர்க்கங்களுக்கேற்ப 10–80ஞிட் உயரம் வரை வளரக்கூடியது. காய்கள் வர்க்கங்களைப் பொறுத்து கீழ் நோக்கியோ வளரும். காயின் நிறம், பருமன், நீளம் என்பனவும் மாறுபடும்.

## காலநிலை

மிளகாய் பொதுவாக வறள்வலயக் காலநிலைக்குரிய பயிராகும். இப்பயிர் பொதுவாகக் கடல்மட்டத்திலிருந்து 1600ட் உயரம் வரை பயிரிடக்கூடியது. இப்பயிர் 5 மாதகாலம் வரை சிறப்பாக வளர்ந்து பயன்தரும். இப்பயிரின் சிறப்பு வெப்பநிலையாக 22ணீ இ–28ணீஇ உள்ளது. உயர் வெப்பநிலையும் தாழ் ஈரப்பதனும் இப்பயிரின் வளர்ச்சியைப் பாதிப்பதுடன் பனிப்பூச்சியின் தாக்கத்திற்கு ஏதுவாகலாம். அதிக பருவம் – அக்டோபர் இறுதியில் – நவம்பர் நடுப்பகுதி. நுச்டூச் பருவம் – ஏப்ரல் – மே ஆரம்பம் கட்டுப்படுத்தப்பட்ட சூழ்நிலையில் ஆண்டு முழுவதும் வளர்க்கலாம்.

## மண்ணின் தன்மை

நீர் வழிந்தோடக்கூடியதும் உரிய போசனைப் பொருள் கொண்டதாகிய இருவாட்டி மண்ணே சிறந்தது. நல்ல வடிகால் வசதியுடன் கூடிய ஆழமான மணல் கலந்த களிமண் மண் சிறந்தது. மண்ணில் உள்ள கரிமப் பொருட்களின் அளவு மிகவும் முக்கியமானது.

## பயிரிடும் காலம்

பொதுவாக எமது பிரதேசத்தில் மார்கழி, தை மாதங்களில் பயிரிடப்படும் சில வேளைகளில் ஆனி, ஆடி மாதங்களிலும் பயிரிடப்படும்.



மிளகாய்ச் செடியின் வர்க்கங்கள்.

## MI - I 01

செ.மீ 65 – %5 உயரமான, பரந்த–இலைகள் கொண்ட இரகம் அதிக கிளைகள் இல்லாதது. மெல்லிய நீண்ட கூர்முனை செ.மீ. 9 – 13 ஆகும். தற்போது விதை உற்பத்தி இல்லை. 1962 இல் உருவாக்கப்பட்டது.

## MI - I 02

சிறந்த கிளை மற்றும் கிடைமட்டமாக பரவியது. அறுவடை எளிதானது. கூர்முனை குறுகியது. மிகவும் காரமானது. பச்சை : உலர் விகிதம் 3.5 : 1. MI 1 வகையின் தேர்வு.

## KA 02

MI 2 மற்றும் PC1 ஆகியவை தயாரிக்கப்படுகின்றன. ஆரம்பகால வளர்ச்சி முறை MI2 வகையைப் போன்றது. 50-&60-cட் உயரம் வரை வளரும். ஒரு நெற்று செ.மீ. இது சுமார் 8 – 11 நீளமானது மற்றும் வசந்த காலத்தில் சாகுபடிக்கு ஏற்றது. இலை கருகல் நோயை ஓரளவு எதிர்க்கும்.

## MI HOT

பச்சை மிளகாய் மற்றும் காய்ந்த மிளகாய் விளைவிக்க ஏற்றது. ஒரு நெற்று செ.மீ. 8 – 9 நீளம். ஒப்பீட்டளவில் குறைவான கடுமையானது. செ.மீ 60 அடி உயரமுள்ள இச்செடி மிதமாக பரவி கிளைகளைக் கொண்டுள்ளது. ஆந்த்ராக்னோஸுக்கு மிதமான எதிர்ப்பு. மற்ற வகைகளுடன் ஒப்பிடும்போது, இது பூஞ்சை நோய்களுக்கு எதிர்ப்புத் திறன் கொண்டது. குறைந்த ஈரப்பத நிலையிலும் சாகுபடியை நன்கு பராமரிக்கலாம். ஒரு ஹெக்டேருக்கு டன் காய்ந்த மிளகாய். 3.0 ஆகும் தற்போது விதைகள் உற்பத்தி செய்யப்படவில்லை.

## MI GREEN

செங்குத்தாக 75-100cm உயரம் வரை வளரும். வட மாகாணத்திற்கு மிகவும் பொருத்தமானது. கூர்முனை 12 – 14ஞிட் நீளம். காய்ந்த மிளகாய் உற்பத்தியில் அதிக காரமான தன்மை இருப்பதால் காய்ந்த மிளகாய் உற்பத்திக்கு ஏற்றது. வட மாகாணத்திற்கு மிகவும் பொருத்தமானது.

இதே போன்று பல்வேறு வகையான வர்க்கங்கள் பயிரிடப்படுகின்றன.

## தாக்கும் பீடைகளும் நோயும் .

அந்திரக்னோஸ் நோய் கொலற்றோரிக்கம் கப்சிசி, கொலற்றோரிக்கம் மோறாஸ்டிஸ் ஆகிய பங்கஸ்களினால் ஏற்படும். சிறிய வட்டவடிவான குழிவிலிருந்து கபில அல்லது சாம்பல் அல்லது



கரு நிறமான அழுகல் புள்ளிகள் தோன்றும். இந்நோயினாற் பழங்கள், விதைகள், பூக்காம்புகள் பாதிப்படையும்.

## இலைசுட் பீடை

நாற்றுப்பருவத்திலிருந்து சகல பருவங்களையும் தாக்கலாம். பனிப்பூச்சிகள், சிற்றுண்ணிகளினால் ஏற்படலாம் அல்லது வெண் ஈயினாற் பரப்பப்படும் வைரசினால் ஏற்படும்.பனிப்பூச்சியினால் ஏற்படும் இலைச்சுருளானது இளம் இலைகளின் மேற்பரப்பு ஓரங்களில் இருந்து சாறு உறிஞ்சப்படுவதனால் இலைகள் தோணி போல் மேற்புறமாக சுருளடையும், வைரஸ் தொற்றினால் ஏற்படும் இலைச்சுருளானது பயிரின் இறுதிப் பருவத்தில் தாக்கும். இலைகள், தளிர்களில் இருந்து சாறு உறிஞ்சப்படுவதனால் இலைகள் தடிப்படைந்து மேல்நோக்கிச் சுருளும். அத்துடன் கணுக்கள் சிறுக்கும் அதிக கிளையுருவாகும் இலை சிறுக்கும். இதனை இயற்கை முறை கட்டுப்பாட்டினால் நிவர்த்தி செய்யலாம்.

## அறுவடை

முதல் அறுவடையானது சுமார் %0–80 நாட்களில் மேற்கொள்ளப்படும் 8–10 நாளிடைவெளியில் அடுத்தடுத்து அறுவடைகளை மேற்கொள்ளலாம். இவ்வாறு அறுவடை செய்யப்பட்டதும் தரம் பிரித்து (மிளகாய், பழம் இலை, பழுதடைந்த காய்/பழம்) உரியவற்றைச் சந்தைப்படுத்தலாம்.

களஞ்சியப்படுத்துதல்.


நன்கு பழுத்த பழங்களைப் பிரித்தெடுத்துத் தரம்பிரித்து சணலாலான சாக்குகளில்/ மணலில் காயவிட்டுப் பின்பு அதனை நன்கு காய்ந்த நிலையில் காற்றோட்டமுள்ள அறையில் பரண் அமைத்து அல்லது நிலத்தின் மேல் சாக்குகள் போட்டு அதன் மேல் காற்றோட்டமுள்ள சாக்குகளில் இட்டு ஐதாக வைக்கப்பட வேண்டும்.

## விதையுற்பத்தி

3வது அறுவடையிற் பெறப்பட்ட சிறந்த பழங்களைச் சேகரித்து அதனை நன்கு காயவைத்து அதிலிருந்து பெறப்படும் விதையே சிறந்தது. வேறு ஒத்த குணிடூச்ணச்ண்னுச்னு குடும்பப் பயிர்கள் செய்யப்படாத இடங்களில் பெறப்பட்ட மிளகாய் விதைகள் உரிய சிறந்த குணாதிசங்களை கொண்டிருக்கும். பொதுவாக மிளகாய்ப் பழம்: செத்தல்: விதை=12:4:1 என்ற விகிதத்தில் அமைதல் சிறப்பு.

## நீர் முகாமைத்துவம்

நடுகையின் பின்னால் 2 வாரம்வரை மண்ணின் ஈரலிப்பு குறையாது பேணப்பட வேண்டும். பின் மண்ணின் தன்மை, காலநிலை, பயிரின் தன்மை ஆகியவற்றைக் கொண்டு நீர்ப்பாசன இடைவெளியைத் தீர்மானிக்கலாம். மண்ணிற்கு அதிக இயற்கைப் பசளையை இடுவதன் மூலம் பாசனஞ் செய்யும் நீரை மண் பிடித்து வைத்திருக்கும் தகவினைக் கூட்ட முடியும். பூக்கும் காலத்தில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படின் பூக்கள் உதிர்தல் அதிகரிக்கும். நீர்ப்பாசனம் செய்தபின் நீரிழப்பைத் தடுத்து ஈரலிப்பைச் சீராகப்பேண வைக்கோல் அல்லது சீமைக்கிளுவை இலையைப் பயன்படுத்தலாம். நாற்று நட்டு நிலையாகும் வரை தினமும் நீர் பாய்ச்ச வேண்டும். பின் இளம் பருவத்தில் 3–4 நாட்களிற்கு ஒருமுறையும் முதிர்நிலையில் 4–5 நாட்களுக்கு ஒரு தடவையும் நீர்பாய்ச்சல் நன்று.





யேமிகா பொன்னுத்துரை
விவசாய பீடம்,
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகம்

ஆடுகளம்

# ஆடுகளங்களின் அதிர்வுகள்

ஏ.ஜே.ஞானேந்திரன்

# விளையாட்டு விளையாட்டாக



## காசேதான் கடவுளப்பா..

அடடா இந்தப் பணம் எப்படி எப்படியெல்லாம் கிரிக்கெட்டில் விளையாடி வருகின்றது என்பதைப் பார்க்கும்போது, வியப்பே மேலிடுகின்றது. உலக நாட்டு வீரர்களை பெரிதாக ஈர்க்கும் இந்தியாவின் ஐபிஎல் தொடர் சுற்றொன்று மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் நிலையில், வீர்களுக்கான ஏலங்களும் தெரிவுகளும் சூடுபிடித்துள்ளன.

சென்னை சுப்பர்கிங்ஸ் கழகம் இங்கிலாந்து




அணியின் தலைவரான பென் ஸடோக்ஸ் என்ற ஆல்ரவுண்டரை கடும் போட்டிக்கிடையே பதினாறரை கோடி ரூபாய்க்கு(இந்திய) வாங்கியிருப்பது, இன்று பேசுபொருளாகி இருக்கின்றது. தெரிவைத் தாண்டி, இவரே தோனிக்கு பதிலாக அணித் தலைவராக்கப்படலாம் என்ற பேச்சுக்களும் பரவ ஆரம்பித்துள்ளன.

## தலையின் விலை 18 கோடி

16வது ஐபிஎல் கிரிக்கெட் போட்டிக்கான வீரர்களின் ஏலம் கொச்சியில் இடம்பெற்றிருந்தது. இதில் 80வீரர்கள் மொத்தம் 16% கோடிக்கு விற்கப்பட்டு இருக்கிறார்கள். ஐபிஎல் வரலாற்றில் இதுவரை இல்லாத நிகழ்வாக 4வீரர்கள் ரூபா16 கோடிக்கு மேல் விலைபோயிருக்கிறார்கள். ஐபிஎல் வரலாற்றில் இது அதிக பட்ச தொகையாகும். இங்கிலாந்தின் ஆல்ரவுண்டரான சாம் கரனை பதினெட்டரை கோடிக்கு பஞ்சாப் கிங்ஸ் அணியும், அவுஸ்திரேலியாவின் கேமரூன் கிரீனை பதினேழரை கோடிக்கும், இங்கிலாந்தின் அணித் தலைவரான பென் ஸடோக்ஸை பதினாறரை கோடிக்கும் வாங்கியுள்ளார்கள்.

விலைவாசி உயர்வுகள் விளையாட்டையும் விட்டு வைக்கவில்லை போலிருக்கின்றது.

## பாக்ஸிங் டே போட்டி

அவுஸ்திரேலியா–தெ.ஆபிரிக்க அணிகள் மோதும் பாக்ஸிங் டே டெஸ்ட் போட்டி, மெல்பேர்ன் நகரில், 26ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஏற்கனவே நடந்த முதலாவது டெஸ்ட் போட்டியில் தெ.ஆபிரிக்க அணி படு தோல்வியைச் சந்தித்திருந்தது. அவுஸ்திரேலியாவின் ஆரம்ப ஆட்டக்காரரான 36வயது வார்னருக்கு இது 100வது டெஸ்டாகும். 3 டெஸ்ட் போட்டிகள் இத் தொடரில் இடம்பெறவுள்ளன.


கிறிஸ்மஸ் பண்டிகைக்கு மறுநாள் தொடங்கும் டெஸ்ட் போட்டி பாக்ஸிங் டே (Bosing Day ) போட்டி என்று அழைக்கப்படுகின்றது. ஒருவருக்கொருவர் சண்டையிடும் நாள் என்ற அர்ததத்தை இது கொண்டிருக்கவில்லை. இதன் பின்னணி சில ருசிகரமான தகவல்களைக் கொண்டுள்ளன.

இங்கிலாந்து, நியூசிலாந்து போன்ற மேலைநாடுகளில் கிறிஸ்மஸ் பண்டிகையன்று தேவாலயங்களின் முன்பு பெரிய பெட்டியொன்று வைக்கப்பட்டிருக்கும். ஆலயத்திற்கு வருபவர்கள் தங்களால் முடிந்த நன்கொடையை அந்தப் பெடடடிக்குள் போட்டுச் செல்வதுண்டு. பண்டிகைக்கு அடுத்த நாள் பரிசுப் பொருட்கள் நிறைந்த அந்தப் பெட்டி திறக்கப்படும். இவை வறிய மக்களுக்கு வழங்கப்படும் இந்தப் பெட்டி திறக்கும் நாளையே பாக்ஸிங் டே என்று அழைக்கத் தலைப்பட்டார்கள்.

பண்டைய காலத்தில் காற்றால் இயங்கும் பாய்மரக் கப்பல்களில்தான் நெடும் கடற் பயணங்கள் மேற்கொள்ளப்பட்டன. டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற இப்படியான கப்பல்களில்தான் கிரிக்கெட் முன்பு பயணித்து'ளளார்கள். 5போட்டிகள் கொண்ட ஒரு டெஸ்ட் தொடர் நிறைவுபெற்று வீடு திரும்ப அப்பொழுது பல மாதங்கள் தேவைப்பட்டுள்ளன..பயணம் ஆரம்பிக்கும் போது கப்பலில் உள்ள ஒரு பெட்டியில் பணம் வைக்கபட்டிருக்கும். பயணம் ஆபத்தின்றி வெற்றிகரமாக முடிந்ததும் அந்தப் பெட்டி திறக்கப்பட்டு, பணம் முழுவதும் கோவில் பாதிரியாரிடம் கையளிக்கப்படும்.இது ஏழைகளுக்கு வழங்கப்படும் இதுவும் பாக்ஸிங் டே பெயருக்கு ஓர் அச்சாரமாகச் சொல்லப்படுகின்றது.

## தரவரிசை

கட்டார் உலகக் கிண்ண உதைபந்தாட்டத் தொடர் முடிவடைந்த நிலையில், தரவரிசைப் பட்டியலை சர்வதேச கால்பந்து சம்மேளனம்






(பீபா) வெளியிட்டுள்ளது. இதில் உலக சாம்பியனான ஆர்ஜென்ரீனா 3வது இடததிலிருந்து 2வது இடத்திற்கு முன்னேறியுள்ளது. அதே சமயம் காலிறுதி சுற்றில் வெளியேறிய பிரேசில் முதலிடத்தைப் பிடித்துள்ளது. சமீபகால ஆண்டுகளின் செயற்திறன் அடிப்படையில் இந்த முதலிடம் கிடைத்துள்ளது. இறுதிச் சுற்றில் ஆர்




ஜென்டீனாவிடம் தோற்ற பிரான்ஸ அணியும் ஓர் இடம் முன்னேறி 3வது இடத்தைப் பிடித்துள்ளது. நாலாவது இடத்தைப் பெல்ஜியம் பிடித்துள்ளது. இங்கிலாந்து, நெதர்லாந்து அணிகள் முறையே ஐந்தாவது ஆறாவது இடங்களைல் நிற்கின்றன. குரோஷியா 7வது இடத்திலும், இத்தாலி(ஐரோப்பிய சாம்பியன்) எட்டாவது இடத்திலும் நிற்கின்றன.

## தங்கக் காலணி

சிறந்த காற்பந்தாட்ட வீரர் ஒருவருக்கு தங்கக்காலணி கொடுத்து கௌரவிப்பது நம் எல்லோருக்குமே தெரியும். உலகக் கிண்ண ஆட்டங்களில் அதிகமாக கோல் அடிப்பவர்தான் இந்தப் பரிசைத் தட்டிச் செல்கிறார். தங்கக் காலணி போல இரண்டாவது பரிசாக வெள்ளிக் காலணியும், மூன்றாவது பரிசாக வெண்கலக் காலணியும் கொடுத்து கௌரவித்து வருகிறார்கள். முதன் முதலாக

இந்தப் பரிசு கொடுக்க ஆரம்பித்த காலம் (1982) தொடக்கம் , இன்றுவரையில் கௌரவிக்கப்பட்டவர்கள் பட்டியல் இதோ!

1982: Paolo Rossi, Italy
1986: Gary Lineker, England
1990: Salvatore Schillaci, Italy
1994 (shared): Oleg Salenko, Russia and Hristo Stoichkov, Bulgaria
1998: Davor Suker, Croatia
2002: Ronaldo, Brazil
2006: Miroslav Klose, Germany
2010: Thomas Muller, Germany
2014: James Rodriguez, Colombia
2018: Harry Kane, England
2022: Kylian Mbappe

★ பிரேசிலுக்கு எதிரான முதல் ஆப்பிரிக்க வெற்றி, ஒரு அரபு தேசிய அணி (மொராக்கோ) காலிறுதியை எட்டியது என்பது உலக வெற்றிக் கிண்ணப் போட்டிகளில் முதற் தடவையாக இடம்பெற்ற நிகழ்வுகளாகும்..

★ கத்தார் 2022 உலகக் கோப்பை கோடைக்கு பதிலாக குளிர்காலத்தில் நடைபெறும் முதல் போட்டியாகும்.

இந்த ஆண்டு வரை(2022), உலகக் கோப்பை எப்போதும் கோடையில்தான் நடந்தது.

1930 ஆம் ஆண்டு தொடங்கிய முதல் உலகக் கோப்பைப் போட்டிக்குப் பிறகு, அதனை நடத்துவதில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் மட்டுமே ஆதிக்கம் செலுத்தின. பின்னர் 2002 ஆம் ஆண்டில் ஜப்பானும் தென் கொரியாவும் இணைந்து நடத்தியது, இந்த நிகழ்வை நடத்திய முதல் ஆசிய நாடுகள் இவை ஆகும். 2010–ஆம் ஆண்டில், தென்னாபிரிக்கா உலகக் கோப்பை நடத்திய முதல் ஆபிரிக்க நாடாக ஆனது. 2022 இல் கால்பந்தின் மிகப்பெரிய விளையாட்டு நிகழ்வை நடத்தும் முதல் மத்திய கிழக்கு மற்றும் அரபு நாடாக கத்தார் பட்டியலில் இணைந்தது.

## பணத்தில் குளித்த சாம்பியன்கள்

பல மில்லியன் தொகையான டாலர்கள் இந்த காற்பந்தாட்ட வெற்றிக் கிண்ண விழாவிற்கு கொட்டப்பட்டன. அப்படியானால் வெற்றி பெற்ற அணிகள் எவ்வளவு பணத்தைச் சம்பாதித்தன?

சாம்பியனாக வந்த அணிக்கு பரிசுத் தொகை 42 மில்லியன் டாலர்கள்.

இரண்டாவது இடத்தைப் பிடித்த பிரான்ஸ் அணி பெற்ற தொகையோ 30 மில்லியன்.

குரோஷியா 27 மில்லியன் டாலர்களைப் பெற மொரக்கோ 25 டாலர்களைப் பெற்றது.


அதே சமயம் கட்டாரில் விளையாடிய அனைத்து அணிகளுக்கும் தலா 9 மில்லியன் டாலர்கள் என்ற கணக்கில் பரிசுத் தொகை வழங்கியிருக்கிறார்கள்....

இத் தொகை முழுவதும் அணிவீரர்களுக்கு கிடைக்காவிடினும், கணிசமான தொகை அணி வீரர்களைச் சென்றடைகின்றது.

பிரான்ஸின் நட்சத்திர வீரர் Kylian MbappUS , பிரான்ஸ் காற்பந்தாட்ட பெடரேசன் மேலதிக தொகையாக 586,000 கொடுத்துள்ளது. இறுதி மோதலுக்கு தேர்வாகியதற்காக இந்த அன்பளிப்பு.....

விளையாட்டு பணத் தாள்களில் குளிக்கின்ற விந்தை இதுதானோ?

# மரபுக்கவிதைகளோடு களமாடல்!




**நடத்துநர் : இணைப்பேராசிரியர் முனைவர் மனோன்மணி தேவி அண்ணாமலை**
**தொகுத்தவர் : முனைவர் சரசு, பினங்கு**
**தலைப்பு : எழுச்சி வெண்கலிப்பா**

எல்லாரும் வாழ்வில்தான் இன்பமுடன் இணைந்திடத்தான்
சொல்லாமல் தீவிரமாய்த் துணிந்தேதான் செயல்படுவோம்!
அன்புடன்தான் பகிர்ந்தேதான் ஆழ்மனத்தில் தோன்றியதை
இன்பமுடன் எழுச்சியுடன் ஏற்கும்நம் பெற்றோரின்
ஒன்றிணைந்த பாசவலை உருகிடணும் பிள்ளைகள்தான்
என்றுமந்த எழுச்சிக்கே ஈடிணைதான் இல்லைகாண்
சிந்தனைகள் மேலோங்கச் சிறுவர்கள் ஒன்றிணையச்
சொந்தமுடன் இணைந்திடவே சொல்!

**கவியருவி நாணல், மலாக்கா.**



பாரினங்கள் வசிக்கின்ற பசும்மலைய நாட்டினிலே !
ஓரினமாய் நமக்குள்ளே ஒளிந்திருக்கும் பகைக்கிள்ளி ;
உயர்நிலையில் வளர்கின்ற ஒருமொழியின் மக்களன்றோ !
வியர்வைதனை உரமாக்கி விழியானோம் நாட்டிற்கே !
எந்நாட்டில் எழுச்சிதனை ஏற்படுத்தும் தமிழினத்தார்
பன்னாட்டில் வாழினும்பண் பாட்டினிலும் மேன்மையரே !
ஆழியிலே கடந்தாலும் ஆகாயம் பறந்தாலும்
ஊழிதொறும் காண்பாரே உயர்வு !

**நா.இராசமோகன்**



வீழ்ந்தாலும் மறுபடியும் விதையாக வீழ்ந்திடுநீ!
வாழ்ந்தாலும் விருட்சம்போல் வானுயர எழுந்திடுநீ!
தாழ்ந்திடவோ பிறந்திட்டோம் தமிழனென்று இம்மண்ணில்
வாழ்ந்தேதான் காட்டிடுவோம் வையகத்தில் நாமின்று
தலைநிமிர்ந்து நின்றிடணும் தலைமுறையும் நமக்குப்பின்
நிலையறிந்து செயல்பட்டால் நீடிப்போம் எழுச்சியுடன்!
வருகிறது தேர்தலுமே வாக்களிப்போம் நல்லோர்க்கே
வரும்நாள்கள் தரமாகும் நம்பு!

**இந்திராணி வரதன் சொகூர் பாரு**



காரணத்தைத் தேடாமல் கடவுளின்மேல் சாற்றிவிட்டுப்
பூரணமாய் நிம்மதியில் புதைந்திருக்கோம் என்றெண்ணிப்
பெற்றிருக்கும் உயிர்மூச்சின் பெருமையினை உணராமல்
கற்றிருப்ப தாய்எண்ணிக் காலத்தைக் கடத்திடலோ?!
சிந்தனையில் வருவதுவோ சிலநூறாம் ஒருநொடிக்குள்
நொந்தலைதல் விட்டிடவும் நோவினைகள் தீர்த்திடவும்
உடல்மனத்தைத் தாண்டிடவே உறுதியுடன் கவனித்தால்
கடலெழுச்சி கண்டிடுவாய் களித்து!

**அ.மு.நௌஃபல்**



மனவெழுச்சி வேண்டுமடி மதிமயக்கம் கலைத்திடடி
உனதெழுச்சி ஓங்குமடி உலகமெலாம் புகழுமடி!
கதிரெழுச்சி போல்நீயும் கருவானைக் கிழித்தெழுடி!
விதிவென்று சாய்த்திடடி வீணரைநீ வீழ்த்திடடி!
எண்ணமதில் மிளிர்ந்திடடி ஏற்றமதைக் கொண்டிடடி!
வண்ணமதில் வானவில்லாய் வாழ்வதனை மாற்றிடடி!
கருவாகி உயிராகிக் காத்தருளும் இறைமைநீ!
உருவாகி மென்மேலும் உயர்!

**முனைவர் சரசு, பினாங்கு**



# சிரிக்க... சிந்திக்க...

## கடந்து போக....

